இறைவனைத் தேடுவதில் பணிவு ஒரு முக்கிய நிபந்தனை பக்கம் 3

காலத்தின் இமாமும் இறைநேசமும் பக்கம் 8

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்-12 பக்கம் 12

1974-ல் பாக்கிஸ்தான் தேசிய அவை நிகழ்வுகளின் சில நினைவலைகள் பக்கம் 19


மாத இதழ்

# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | September 2026 | Vol. 5 - Issue No. 10



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





நீர் கூறுவீராக: [மக்களே!] நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். [அப்போது] அல்லாஹ்[வும்] உங்களை நேசிப்பான்.

[ஆல இம்ரான் 3:32]



# திருக்குர்ஆன்

وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى
الْاَرْضِ هَوْنًا وَّاِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ
قَالُوْا سَلٰمًا

மேலும் அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவர். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீன -மாகப்) பேசினால் அவர்கள் (சண்டையிடமாட்டார்கள். மாறாக) நாம் உங்களுக்காக சாந்தியை வேண்டுகிறோம் என்பர். (25:64)



# ஹதீஸ்

عَنْ أَبِي سَعِيدٍ، عَنْ رَسُولِ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ
قَالَ " مَنْ يَتَوَاضَعْ لِلَّهِ سُبْحَانَهُ دَرَجَةً يَرْفَعْهُ اللَّهُ بِهِ
دَرَجَةً وَمَنْ يَتَكَبَّرْ عَلَى اللَّهِ دَرَجَةً يَضَعْهُ اللَّهُ بِهِ
دَرَجَةً حَتَّى يَجْعَلَهُ فِي أَسْفَلِ السَّافِلِينَ " .

ஹஸ்ரத் அபீஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் அல்லாஹ்விற்காக தன்னை ஒரு படி தாழ்த்திக் கொள்கிறாரோ, அவரை அல்லாஹ் ஒரு படி உயர்த்துகிறான். எவர் அல்லாஹ்விற்கு எதிராக ஒரு படி பெருமை கொள்கிறாரோ, அவரை அல்லாஹ் ஒரு படி தாழ்த்துகிறான். இறுதியில் அவரை மிகத் தாழ்ந்தவர்களின் கீழ்மட்டத்திற்கு ஆக்கும் வரை (இவ்வாறே செய்வான்).

(சுனன் இப்னு மாஜா – ஹதீஸ் எண் 4176)

# இறைவனைத் தேடுவதில் பணிவு ஒரு முக்கிய நிபந்தனை

**மதிப்பிற்குரிய அயாஸ் மஹ்மூத் கான் சாஹிப்**
(Missionary Add. Wakalat-e-tasneef, UK)

தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்



وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا وَّاِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا

அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மை-யான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவார். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி எனக் கூறிச் சென்று விடுவார்கள். (25:64)

ஒரு விதையை விட அற்பமான பொருள் வேறென்ன இருக்க முடியும்? கண்ணுக்குத் தெரியாத நிலையில் மறைந்திருந்த அது, முதலில் வெளிச்சத்திற்கு வருகிறது. ஆரம்பத்தில் பலவீனமாகவும் நிமிர்ந்து நிற்க இயலாத நிலையிலும் இருக்கும் அந்தச் சிறு செடி, காற்று வீசும்போது பணிவுடன் தலை குனிந்தபடியே இருக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள ஆபத்துகளைத் தடுத்து நிறுத்த இயலாத நிலையில், மிகச் சிறிய உயிரினங்கள் கூட அதை வேரோடு பிடுங்கி எறிந்து விடக்கூடும். ஆனால், அதிலிருந்தே அது வளர்கிறது. ஒரு காலத்தில் அந்தச் சிறிய விதை கம்பீரமான மரமாக மாறுகிறது. ஒரு காலத்தில் அதற்கு அச்சுறுத்தலாக இருந்த அதே உயிரினங்கள், இப்போது அந்த மரத்தின் நிழலில் ஆறுதலையும் பாதுகாப்பையும் பெறுகின்றன. இறுதியில் அந்த மரம் கனிகளைத் தரும்போது, இறைவனின் எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக, அதன் கிளைகள் தரையை நோக்கி மேலும் தாழ்ந்து வணங்குகின்றன. தொடர்ந்து பணிவுடனும் சேவை மனப்பான்மையுடனும் திகழும் அந்த மரம் ஒரு காலத்தில் வெறும் விதையாகத் தொடங்கி இறுதியில் அனைவருக்கும் உணவளிக்கும் ஊற்றாக மாறுகிறது. உலகம் அதன் கனிகளின் இனிமையைச் சுவைக்கிறது.

ஆன்மிக உலகிலும் நாம் காண்பதை இது பிரதிபலிக்கிறது. இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் குறிப்பாக இறைத்தூதர்கள் பணிவு இல்லாமல் இறைவனின் நெருக்கத்தை அடைய முடியாது என்பதை மற்ற எல்லாரையும் விட நன்கு அறிவார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனைத் தமது உருது கவிதை வரிகள் ஒன்றில் மிக அழகாக விவரிக்கிறார்கள்:

"உங்கள் சிந்தனையில் நீங்கள் எல்லாரையும் விட தாழ்ந்தவர் ஆகி விடுங்கள்.

ஒருவேளை இதன் மூலம் இறைநெருக்கத்தின் கதவுகள் திறக்கலாம்."

ஒரு விதை வானத்தை நோக்கி உயரும் முன் தன்னை முதலில் மண்ணில் புதைத்துக் கொள்வது போல, நாமும் இறைவனைத் தேடும் பயணத்தில், நம்மைப் படைத்தவனின் பக்கம் நெருக்கமாக உயர்வதற்கு முன்னதாகவே நாம், நமது அகங்காரத்தை அடக்கிப் புதைக்க வேண்டும். பணிவு இறைவனைத் தேடுவதற்கான ஓர் இன்றியமையாத நிபந்தனை ஆகும்.

## அருளுக்குரிய இறைவனின் அடியார்கள்:

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில், 'இபாதுர் ரஹ்மான்' எனப்படும் இறைவனின் அடியார்களுக்கான மிக முக்கிய அடையாளம் என்னவென்றால், முதலாவதாகவும் மிக முக்கியமாகவும் அவர்கள் பணிவுடையவர்களாகத் திகழ்கிறார்கள் என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். இரண்டாவதாக, தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்கொள்ளும் போதும் அவர்கள் எப்போதும் கருணையையும் கனிவையும் வெளிப்படுத்துகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், இறைவனுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளை (ஹுகூகுல்லாஹ்) நிறைவேற்ற நம்மைச் செயல்பட வைக்கும் அடிப்படைப் பண்பு பணிவுதான். அதே வேளையில், சக மனிதர்களுடன் (அதாவது இறைவனின் படைப்புகளுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளான 'ஹுகூகுல் இபாத்'-ஐப் பேணும் வகையில்) அன்பான உறவை வளர்ப்பதும் இந்தப் பணிவுதான்.

## இறைவணக்கதின் அடித்தளமாக திகழும் பணிவு:

முதலில், இறைவனுக்கு நாம் செலுத்த வேண்டிய உரிமையைக் குறித்துத் தொடங்குவோம். வல்லமையுள்ள அல்லாஹ்வை வணங்குவதே நமது படைப்பின் மிக முக்கிய நோக்கமாகும்.

தொழுகையின்போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பிரார்த்தனை, உடல்நிலை மற்றும் அசைவு ஆகியவற்றில் பணிவு வெளிப்பட்டாலும், ஒரு முஸ்லிம் முழுமையான அடிபணிதலுடன் இறைவனின் முன்னிலையில் சிரம்பணிந்து ஸஜ்தா செய்வதே அதன் மிகச் சிறந்த வெளிப்பாடாகும். இது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதாவது:

ஓர் அடியான் தன் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருப்பது அவன் ஸஜ்தாவின் நிலையில் இருக்கும் போதுதான்.

இவ்வகையில், இறைவனுக்கு அடிபணிதலும் அவனை வணங்குதலும் பணிவை அடிப்படையாகக் கொண்டவை என்ற விலைமதிப்பற்ற பாடத்தை வல்லவனான அல்லாஹ் நம்

மனங்களில் பதிய வைக்கிறான். ஆனால், இந்தப் பணிவை நம் அன்றாட வாழ்க்கையிலும் வெளிப்படுத்த வேண்டும் என்பதே இதன் உண்மையான நோக்கமாகும்.

எனினும், நம்மைச் சுற்றியுள்ளவர்களை உற்று நோக்கும்போது, சிலர் தங்கள் குடும்ப அந்தஸ்தைக் குறித்தும், வேறு சிலர் தங்கள் செல்வத்தைக் குறித்தும், இன்னும் சிலர் தங்கள் பிள்ளைகளைக் குறித்தும், மற்றும் சிலர் தங்கள் பதவி மற்றும் அதிகாரத்தைக் குறித்தும், வேறு சிலர் தங்கள் அறிவு மற்றும் கல்வியைக் குறித்தும் பெருமையும் அகங்காரமும் கொள்வதைக் காண முடிகிறது.

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கம்:

சில சமயங்களில், மக்கள் ஆன்மிக ரீதியாக முன்னேற்றம் காணும்போது, பணிவு வளருவதற்குப் பதிலாக, அது அவர்களின் அகங்காரத்தைத் தூண்டி விடுகிறது. இதனால் அவர்கள் தங்களை மற்றவர்களை விடச் சிறந்தவர்களாகக் கருதத் தொடங்குகிறார்கள்.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, எல்லா மனிதர்களிலும் மிகவும் புனிதமானவ-ராகவும் இறைபக்திமிக்கவராகவும் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், துளியளவும் ஆணவம் இல்லாதவராகவே விளங்கினார்கள்.




ஒருமுறை, அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு வினவினார்கள்: “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்கள் குறைகள் அனைத்தையும் மன்னித்து விட்ட நிலையில், ஏன் இவ்வளவு சிரமத்தை மேற்கொண்டு, உங்கள் பாதங்கள் வீங்கும் அளவிற்கு இரவு நீண்ட நேரம் நின்று வணங்குகிறீர்கள்?” அப்போது, எந்த விதமான மேட்டிமை உணர்வோ அல்லது சாதனை புரிந்தோம் என்ற எண்ணமோ இன்றி, நம் புனிதத் தலைவர் இவ்வாறு பதிலளித்தார்கள்:

ஆயிஷாவே! நிலைமை இவ்வாறிருக்கையில், நான் இறைவனுக்கு நன்றி செலுத்தும் அடியானாக இருக்க வேண்டாமா?

உண்மையிலேயே, இறைத்தூதரிடம் நமக்கு மிகச் சிறந்ததொரு முன்மாதிரி உள்ளது. இறைவனின் அருளையும் கருணையையும் ஈர்க்கக்கூடியதும், அனைத்து ஆன்மிக முன்னேற்றத்திற்கும் ஊற்றாக அமைவதுமான பண்பு இந்தத் பணிவே ஆகும். இஸ்லாத்தின் இறைத்தூதர் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:

“ஒரு அடியான் பணிவுடன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும்போது, வல்லமையுள்ள அல்லாஹ் அவனை ஏழாவது வானம் வரை உயர்த்துகிறான்.”

மற்றொரு சந்தர்ப்பத்தில், புனித நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எவரும் தங்கள் நற்செயல்களால் மட்டுமே சொர்க்கத்தில் நுழைய முடியாது.” இதைக் கேட்ட தோழர்கள், ‘அல்லாஹ்வின் தூதரே! தாங்களுமா?’ என்று வினவினர். அதற்கு நமது அன்பிற்குரிய தலைவர், “இறைவன் தனது அருளையும் கருணையையும் என் மீது காட்டினாலே அன்றி நானும் கூட செல்ல முடியாது” என்று பதில் அளித்தார்கள்.

இறைவன் எவருக்காக முழுப் பிரபஞ்சத்தையும் படைத்தானோ, அந்தப் புனித நபிகளாரின் (ஸல்) இணையற்ற பணிவைக் கவனியுங்கள். வருங்கால சந்ததியினர் அனைவரும் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒரு மிகச்சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்த போதிலும், அவர் தனது சொந்தச் செயல்களைக் குறித்து எவ்வித மேட்டிமை உணர்வையும் கொண்டிருக்கவில்லை.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு இல்ஹாம்:

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) நமக்கு ஒரு மிகச் சிறந்த அறிவுரையை வழங்கியுள்ளார்கள்: “இக்காலத்தில், ஒரு சமூகமாக நாம் கூட்டாக முன்னேற விரும்பினாலும் அல்லது அஹ்மதிகளாகத் தனிப்பட்ட அளவில் வெற்றி பெற விரும்பினாலும், அதற்கான இரகசியம் பணிவைக் கடைப்பிடிப்பதிலும் எப்போதும் பணிவாக இருப்பதிலுமே அடங்கியுள்ளது. ஏனெனில், உம்முடைய பணிவான நடத்தை எமக்கு மகிழ்ச்சி தந்தது என்று அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெளிப்படுத்தினான்.”

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “அல்லாஹ்வின் திருச்சந்நிதியில் ஏற்றுக் கொள்ளப்படு-வதற்குத் தகுதியான ஒரே காணிக்கை பணிவுதான்.”

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்: “பணிவைக் மேற்கொள்ளுங்கள். பணிவைக் கற்றுக் கொள்வது கடினமானதல்ல. சொல்லப்போனால், இதில் கற்றுக் கொள்ள என்ன இருக்கிறது? இயல்பாகவே நாம் பலவீனமானவர்கள் மற்றும் தாழ்மையானவர்கள். மேலும், நாம் தாழ்மைக்காகவே படைக்கப்பட்டுள்ளோம்.”

### இக்காலத்தில் பணிவின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

இக்காலத்தில், இறைவனின் அன்பை ஈர்ப்பது பணிவுதான் என்பதை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது சொந்த முன்மாதிரியின் மூலமும் நிரூபித்துக் காட்டினார்கள். அவர்களது ஆளுமையின் ஒவ்வொரு அம்சமும் இப்பண்பில் முழுமையாக மூழ்கியிருந்தது.

ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு வெப்பமான ஜூன் நாளில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அருகில் உலாவிக் கொண்டிருந்தபோது, நான் ஒரு கட்டிலில் படுத்து உறங்கி விட்டேன். கட்டில் என்பது அமர்வதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு பாரம்பரிய இந்தியப் பாணிக் கட்டில் ஆகும். எப்படியாயினும், ஹஸ்ரத் மௌலவி சாஹிப் அவர்கள் கண்விழித்தபோது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதன் கீழே தரையில் படுத்திருப்பதைக் கண்டு

திகைத்துப் போனார்கள். அதிர்ச்சியடைந்த அவர்கள், மரியாதையின் காரணமாக உடனடியாக எழுந்து நின்றார்கள். ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்புடன் கேட்டார்கள்: 'ஏன் எழுந்து நின்றீர்கள்?' ஹஸ்ரத் மௌலவி சாஹிப் அவர்கள் பதிலளித்தார்கள்: "ஹுஸூர், நீங்கள் தரையில் படுத்திருக்கும்போது நான் எப்படி கட்டிலில் உறங்க முடியும்." வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புன்னகைத்து விட்டுச் சொன்னார்கள்: "நான் உங்களுக்காகக் காவல் காத்துக் கொண்டிருந்தேன். சிறுவர்கள் சத்தம் போடுவார்கள், உங்கள் உறக்கம் கலையாமல் இருக்க நான் அவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தேன்."

## தன்னடக்கமும் நல்லிணக்கமும்:

ஒருமுறை, ஹஸ்ரத் இமாம் ஹசன் மற்றும் ஹுஸைன் (ரலி) ஆகியோருக்கு இடையே ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இளைய சகோதரரான இமாம் ஹுஸைன் கடுமையான சொற்களால் கண்டித்துப் பேசினார்கள். ஆனால் இமாம் ஹஸனோ பொறுமையுடன் மௌனம் காத்தார்கள். மறுநாள், புனித நபிகளாரின் தோழர் ஒருவர் ஹஸ்ரத் ஹஸன் அவசரமாகச் செல்வதைக் கண்டார். எங்கோ சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் எங்கே செல்கிறார் என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்த மூத்த சகோதரர், "நான் ஹுஸைனிடம் மன்னிப்பு கேட்கச் செல்கிறேன்" என்று பதிலளித்தார்கள். முந்தைய நாள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டிற்கு நேரில் சாட்சியாக இருந்த அந்தத் தோழர், "நீங்கள் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும்? ஹுஸைன் தான் கடுமையாகப் பேசினார் எனவே, அவர்தான் உங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று கூறினார்.

இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் அளித்த பதில் மிகவும் நெகிழ்ச்சியூட்டுவதாக அமைந்திருந்தது. அவர்கள் கூறினார்கள்: "நான் மன்னிப்பு கோர வேண்டியதற்கான காரணமே இதுதான். ஏனெனில் ஹுஸைன் என்னிடம் கடுமையாக நடந்து கொண்டார். ஒரு தோழர் என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு செய்தியைத் தெரிவித்திருந்தார்: 'இருவர் தங்களுக்குள் சண்டையிட்டு கொள்ளும்போது, அவர்களில் யார் முதலில் சமாதானத்தை நாடுகிறாரோ, அவரே மற்றவரை விட ஐந்நூறு ஆண்டுகள் முன்னதாகவே சொர்க்கத்தில் நுழைவார்.' இப்போது ஹுஸைன் என்னிடம் முதலில் வந்துவிட்டால், நான் இவ்வுலகம் மற்றும் மறுமை ஆகிய இரண்டிலும் அந்த நல்வாய்ப்பை இழந்து விடுவேன். இவ்வுலகில் அவரது கடுமையான சொற்களை நான் ஏற்கனவே எதிர்கொண்டு விட்டேன். எனவே, மறுமையின் நற்பலனையும் இழக்க நான் விரும்பவில்லை. இதனால்தான், என் சகோதரரிடம் நானே முதலில் மன்னிப்பு கோரப் போகிறேன்."

இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும்போது, சில சமயங்களில் அவர்கள் பல ஆண்டுகளாகப் பேசுவதே இல்லை. சிலர் பழிவாங்கவும் முற்படுகிறார்கள். ஆனால், நம் சமூகத்தில் ஆழமான அன்பை வளர்க்க நாம் விரும்பினால், ஹஸன் (ரலி) அவர்களின் அந்தப் பணிவுப் பண்பைக் கொண்டிருக்க நாம் முயல வேண்டும். ஏனெனில், அந்தப் பணிவுதான் நம் சகோதர சகோதரிகளுடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள நம்மைத் தூண்டுகிறது. உள்ளத்தில் உள்ள வெறுப்புணர்வை நீக்கித் தூய்மைப்படுத்துவது பணிவுதான் சகிப்புத்தன்மையை உருவாக்கி, பொறுமையைக் கற்றுக் கொடுப்பதும் பணிவுதான்.

இதனால்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "எல்லா வகையிலும் உங்கள் அகங்காரத்தைக் கைவிடுங்கள். பரஸ்பர மனக்கசப்புகளை நீக்கி விடுங்கள். உண்மை உங்கள் பக்கம் இருந்தபோதிலும், ஒரு குற்றவாளியைப் போலப் பணிவாக இருங்கள் அப்போது தான் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்."

## பணிவும் தப்லீகும்:

பெரும்பாலும், விவாதத்தில் வெற்றி பெறுவதிலேயே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். மார்க்க விவாதங்களிலும் கூட, எதிராளியின் வாயை அடைப்பதே மிக முக்கியமான விஷயமாகக் கருதப்படுகிறது. நோக்கங்கள் தூய்மையானவையாக இருந்தாலும், சில சமயங்களில் குரல் உயர்த்தப்படுவதும் கடுமையான சொற்கள் பயன்படுத்தப் -படுவதும் நிகழ்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால், விவாதத்தில் சரளமான சொற்கள் எதிராளியை மௌனமாக்கக் கூடும் என்றாலும், அன்பு, கருணை மற்றும் பணிவு ஆகியவையே மக்களின் இதயங்களை வெல்கின்றன. இதுவே



தப்லீக் செய்வதற்கான மிகச் சிறந்த வழியாகும் 'வாக்குறுதி அளிக்கப்பட்ட மஸீஹ்' (Promised Messiah) அவர்களும் இஸ்லாத்தின் செய்தியை இவ்வாறே எடுத்துரைத்தார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கடும் எதிரிகள் ஏதேனும் தேவைக்காக அவர் வீட்டு வாசலை நாடி வந்தாலும், அன்னார் அவர்களை மிகுந்த அன்புடன் வரவேற்று, அவர்களுக்குத் தேவையானதை வழங்கினார்கள் மேலும், தான் அவர்களுக்கு ஏதோ ஓர் உதவி செய்வதாகச் சிறிதளவும் உணர்த்தியதில்லை.

ஒருமுறை, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட விருந்தினர்கள் சிலர், அவர்களைச் சந்திப்பதற்காகக் காதியான் வந்தனர். அவர்கள் அங்கு வந்தடைந்ததும் தங்கள் உடைமைகளை இறக்கி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால், பிற விருந்தினர்களுக்குச் சேவை செய்வதில் மும்முரமாக இருந்த

பணியாளர்கள் உடனடியாக அதைச் செய்யவில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைச் சந்திப்பதற்காக 2000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரம் பயணம் செய்து வந்த அந்த விருந்தினர்கள், தங்களுக்குக் காட்டப்பட்ட இந்த அலட்சியத்தால் மிகவும் மன வேதனை அடைந்து, உடனடியாகத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்லத் தொடங்கினர்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இச்செய்தி கிடைத்ததும், அவர்கள் அந்த விருந்தினர்களைத் தேடி மிக வேகமாக நடந்தார்கள். அந்த அவசரத்தில் அன்னார் தமது காலணிகளைக் கூடச் சரியாக அணிந்து கொள்ள முடியவில்லை. விருந்தினர்கள் குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்த போதிலும், காதியானிலிருந்து சுமார் இரண்டரை மைல் தொலைவில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர்களைச் சென்றடைந்தார்கள். மிகுந்த அன்போடும் பணிவோடும், அன்னார் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கோரினார்கள். பின்னர், அவர்கள் தம்முடன் காதியானுக்குத் திரும்பி வர வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். விருந்தினர்களை வண்டியிலேயே அமர்ந்திருக்குமாறும், தாம் அவர்களுடன் நடந்தே வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். அவர்கள் காதியானை அடைந்தபோது, அவர்களின் உடைமைகளை இறக்கி விட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே முன்வந்து கையை நீட்டினார்கள். ஆனால், அங்கிருந்த பணியாளர்கள் விரைந்து வந்து அந்த உடைமைகளைத் தாங்களே எடுத்துக்கொண்டனர்.

நமது கொள்கைகள் சார்ந்த வாதங்கள் அல்லது விவாதங்களை விட, இத்தகைய கனிவு மற்றும் பணிவுடனான வெளிப்பாடுகளே மற்றவர்கள் மீது மிக நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உலகை அஹ்மதிய்யா கொள்கையை நோக்கி ஈர்க்க நாம் விரும்பினால், நாம் அனைவரும் இத்தகைய பண்புகளையே கொண்டிருக்க வேண்டும்.

### கணவன் மனைவிக்கு இடையிலான இணக்கம்:

கணவன் மனைவிக்கு இடையே அன்பையும் புரிதலையும் வளர்ப்பதும் பணிவுதான். அற்பமான கருத்து வேறுபாடுகளால் விவாகரத்துகள் அதிகரித்து வருவதை இன்று நாம் காண்கிறோம். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது இணையவழி சந்திப்புகளில், தம்பதியினர் பொறுமையைக் கடைப்பிடிக்கவும், ஒருவருக்கொருவர் குறைகளைப் பொறுத்துக் கொள்ளவும், யாரும் குறையற்றவர்கள் அல்ல என்பதை நினைவில் கொள்ளவும் அறிவுறுத்துகிறார்கள். ஆனால், நமது அகங்காரத்தை அடக்கிப் பணிவை வெளிப்படுத்தினால் மட்டுமே இந்த அறிவுரையை நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஒரு கணவராக மிகவும் அன்பாகவும் அக்கறையாகவும் இருந்ததால், மக்கள், 'மிர்ஸா சாஹிப் அவர்கள் தம் மனைவியின் விருப்பத்தையே நிறைவேற்றுவார்' என்று கூறுவதுண்டு. தமது தெய்வீக அந்தஸ்து மற்றும் அளவற்ற பொறுப்புகள் இருந்தபோதிலும், அவர்களுக்கென்று எந்த உரிமையுணர்வும் இருக்கவில்லை. மேலும், தமது குடும்பத்தினரிடமிருந்து எந்தவொரு சிறப்பு கவனிப்பையும் அன்னார் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

> **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**
> **'எல்லா வகையிலும் உங்கள் அகங்காரத்தைக் கைவிடுங்கள். பரஸ்பர மனக்கசப்புகளை நீக்கி விடுங்கள். உண்மை உங்கள் பக்கம் இருந்த போதிலும், ஒரு குற்றவாளியைப் போல் பணிவாக இருங்கள். அப்போதுதான் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்.'**

ஒருமுறை, கடுமையான தலைவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். அருகில் அதிக இரைச்சல் இருந்ததால், ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள், 'ஹுஸுர், இந்த இரைச்சல் உங்களுக்குத் தொந்தரவாக இல்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், "ஆம், அவர்கள் அமைதியாகும் போது எனக்கு நிம்மதியாக இருக்கிறது" என்று பதிலளித்தார்கள். உடனே ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள், "ஹுஸுர், அப்படியானால் அவர்களை அமைதியாக இருக்கும்படி நீங்கள் ஏன் கூறக்கூடாது?" என்று கேட்டார்கள். அதற்கு வாக்களிக்கப்பட்ட மசீஹ் (அலை) அவர்கள், "மவ்லவி சாஹிப், நீங்கள் அவர்களிடம் மென்மையான முறையில் சொல்லுங்கள் அவர்களிடம் எதையும் சொல்வதற்கு எனக்கு மனம் வரவில்லை" என்று பதிலளித்தார்கள். மிகக் கடுமையான நோயின்போதும் கூட, தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சிரமம் கொடுப்பதற்குப் பதிலாக, அந்த அசௌகரியத்தை அன்னார் அமைதியாகப் பொறுத்துக் கொண்டார்கள்.

சில சமயங்களில், உடல் சோர்வாகவோ அல்லது உடல்நலக்குறைவாகவோ உணரும்போது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு குறிப்பிட்ட உணவைத் தயாரிக்குமாறு கூறுவார்கள். பின்னர் அவர்கள் பொறுமையுடன் காத்திருந்து, தமது பணிகளில் முழுமையாக மூழ்கி விடுவார்கள். பல மணிநேரங்களுக்குப் பிறகு, தாம் இன்னும் உணவு உட்கொள்ளவில்லை என்பதை நினைவுகூரும்போது, அவர்கள் மென்மையாகத் தமது உணவைப் பற்றிக் கேட்பார்கள். வீட்டுப் பணியில் இருந்தவர்கள் அதை மறந்து விட்டதாகத் தெரிய வந்தால், அன்னார் ஒரு வார்த்தை கூடக் கூறாமல் புன்னகைத்தபடியே திரும்பிச் சென்று விடுவார்கள். அன்னார் அவர்களை ஒருபோதும் கடிந்து கொண்டதில்லை. அல்லது தமது வேண்டுகோள்களுக்கு அவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று ஒரு சிறு குறிப்பைக் கூட உணர்த்தியதில்லை.

இந்த உதாரணத்தை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, நமக்கு வெட்கம் ஏற்படாமலிருக்க முடியாது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கள் இல்லற வாழ்வில் வெளிப்படுத்திய பணிவு மற்றும் சகிப்புத்தன்மையில் ஒரு சிறு பகுதியையாவது ஒவ்வொரு வீட்டிலும் உள்ள கணவன்மார்கள் கடைப்பிடித்தால், இன்று நம் இல்லங்களில் நிலவும் பிணக்குகள் அனைத்தும் அடியோடு மறைந்து விடும்.

### மனிதகுலத்திற்குச் சேவை செய்வதில் பணிவு:

சில சமயங்களில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மணிக்கணக்கில் நின்று கொண்டு, ஏழை கிராமப்புறப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தாமே நேரில் மருந்துகளை வழங்கி வந்தார்கள். ஒருமுறை, ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள், "ஹுஃஸூர், இது உங்களுக்கு மிகுந்த சிரமத்தை அளிப்பதோடு, உங்கள் பொன்னான நேரமும் பெருமளவில் வீணாகிறது" என்று கூறியபோது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: "இதுவும் ஒரு மார்க்கப் பணியே ஆகும். இவர்கள் தேவையுள்ளவர்கள். மேலும், அருகில் மருத்துவமனை எதுவும் இல்லை. இவர்களுக்குத் தேவை ஏற்படும்போது சேவை செய்வதற்காகவே நான் இம்மருந்து -களை வைத்திருக்கிறேன்."

நாம் ஒருபோதும் பணிவின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. பலர் தங்கள் உயர் அதிகாரிகளிடம் பேசும்போது வெளிப்படையான பணிவைக் காட்டுகிறார்கள். ஆனால், தங்களுக்குக் கீழே உள்ளவர் -களிடமோ அலட்சியமாக நடந்து கொள்கிறார்கள். ஆயினும், நம்மை விட உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் நாம் எவ்வாறு பேசுகிறோம் என்பது நம் குணநலனுக்கான உண்மையான சோதனையல்ல. மாறாக, பலவீனமானவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம் என்பதே அதற்கான உண்மையான சோதனையாகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "இறைவனின் படைப்பினங்கள் மீது பணிவு, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் மற்றும் கருணை ஆகியவற்றைக் கொண்டிருங்கள் அப்போதுதான் நீங்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள்."

### தன்னடக்கம் கோபத்திற்கான மாற்று மருந்து:

நமது கோபத்தை அடக்கி, அதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் பணிவு நமக்கு உதவுகிறது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "வீண் பெருமையும் அகங்காரமும் கோபத்திலிருந்தே தோன்றுகின்றன. சில சமயங்களில், கோபமே கூட அகங்காரம் மற்றும் தற்பெருமையின் விளைவாகவே அமைகிறது. ஏனெனில், ஒரு நபர் தன்னை மற்றவரை விட உயர்ந்தவராகக் கருதும்போதுதான் கோபம் ஏற்படுகிறது. எனது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை உயர்ந்தவராகவோ அல்லது தாழ்ந்தவராகவோ கருதிக் கொள்வதையோ, அகங்காரத்துடன் நடந்து கொள்வதையோ அல்லது ஒருவரையொருவர் இழிவாகப் பார்ப்பதையோ நான் விரும்பவில்லை."

ஒருமுறை கடும் போரின்போது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு வலிமைமிக்க போர் வீரனை வீழ்த்தி, அவனை இறுதியாகத் தாக்கத் தமது கத்தியை ஓங்கியபோது, அந்த நபர் அவர் முகத்தில் துப்பினார். உடனே, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை விடுவித்து விட்டு அமைதியாக விலகிச் சென்றார்கள். குழப்பமடைந்த அந்தப் போர் வீரன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இவ்வாறு கேட்டான்: "என்னை வீழ்த்த நீங்கள் வீரத்துடன் போரிட்டீர்கள். நான் உங்கள் இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கும் ஒரு எதிரி. ஆனால், மிகுந்த சிரமப்பட்டு என்னை இறுதியாகத் தோற்கடித்த பிறகும், இறுதித் தருணத்தில் என்னை ஏன் விட்டுவிட்டீர்கள்?"

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்: "இதுவரை நான் உங்களுடன் போரிட்டது இறைவனுக்காக மட்டுமே. ஏனெனில் நீங்கள் பலவீனமானவர்களைத் துன்புறுத்தினீர்கள். ஆனால், நீங்கள் என் முகத்தில் உமிழ்ந்த போது எனக்குக் கோபம் வந்து விட்டது. இப்போது நான் உங்களுடன் போரிட்டால், அது இறைவனுக்காக இருக்காது. மாறாக, என் அகங்காரத்தைக் காத்துக் கொள்வதற்காகவே அமையும். கோபத்தின் அடிப்படையில் செயல்படுவது ஒரு முஸ்லிமுக்கு அழகல்ல."

இதைக் கேட்டதும், அந்தப் போர் வீரனின் இதயத்தில் இருந்த அவநம்பிக்கை முழுவதுமாக நீங்கி, அவர் இஸ்லாத்தைத் தழுவினார்.

சாதாரண மனிதர்களால் மிகவும் அமைதியான தருணங்களில் கூட தங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கிறது. ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எத்தகைய உயர்ந்த மனிதராகத் திகழ்ந்தார் என்றால், போர்க்களத்தின் கடும் சூழலிலும் கூட அவர் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, இரத்த வெறி கொண்ட ஓர் எதிரியை அன்பிற்குரிய நண்பராக மாற்றிக் காட்டினார். வாளின் வலிமையால் அல்ல. மாறாக பணிவின் ஆற்றலால் அவர் இதைச் சாதித்தார். இதுவே இஸ்லாம். இது போருக்கான மதம் அல்ல. மாறாக, ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும்போது சகிப்புத்தன்மையையும், அநீதியை எதிர்கொள்ளும்போது பொறுமையையும், வெற்றிக்காலத்தில் பெருந்தன்மையையும் போதிக்கும் மார்க்கம். இது இரத்தம் சிந்துவதற்குப் பதிலாக, அகந்தையை அழிக்கும் மார்க்கம் ஆகும்; மனிதர்களின் இதயங்களை வென்றெடுக்கப் பாடுபடும் மார்க்கம் ஆகும்.

(தொடரும்...)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதனுக்கு வெற்றி கிடைக்கும் போதும், அவன் ஏழ்மை மற்றும் துன்ப நிலையில் இல்லாத போதும், அந்த நேரத்தில் எந்த நபர் பணிவை மேற்கொள்வாரோ மேலும் இறைவனை நினைவில் வைப்பாரோ அவர் முழுமையானவர் ஆவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 416 – காதியான் பதிப்பு 2018)

# காலத்தின் இமாமும் இறைநேசமும்

மதிப்பிற்குரிய அதாவுல் மூஃமின் ஜாஹித் சாஹிப்
(Professor, Jamia Ahmadiyya, UK)



✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத் ✧✧✧

நேசம் என்பது மனிதனுடைய இயல்பிலேயே வைக்கப்பட்டுள்ள ஓர் உண்மையான, உயிருள்ள ஆற்றலாகும். அதன் உண்மைத்தன்மை என்னவென்றால், உள்ளமானது ஏதேனும் ஒரு நேசத்திற்குரியவரை விரும்புவதும், அவரது தோற்றம், ஒழுக்கங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் மீது எவ்வாறான ஈர்ப்பு கொள்வது என்றால் அவரது தன்மையிலேயே தன்னை மாற்றிக் கொள்வதுடன், தன் இருப்பையும் அவரது அன்பில் அர்ப்பணித்து விடுவதுமாகும்.

நேசம் என்ற வார்த்தையின் பயன்பாடு குறித்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிக நுட்பமான ஒரு தத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: பொதுவான பேச்சுவழக்கில் இந்த சொல் மனிதர்களுக்கு இடையேயான உறவுகளுக்காகவும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டாலும், அதன் உண்மையான மற்றும் முழுமையான பொருளில் நேசம் என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய பிரத்தியேகமான ஒன்றாகும். ஏனெனில், முழுமையான நேசமானது இறைவணக்கத்தையும் இறைவழிபாட்டையும் வேண்டுகிறது. வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. எனவே, மனிதன் தனது படைப்பாளனிடமும் எஜமானனிடமும் வைக்கும் நேசமே உண்மையான நேசமாகும். (ஸிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் ஸவாலோ(ன்) கா ஜவாப், ரூஹானீ கஸாயின், தொகுதி 12, பக்கம் 369)

இதனால்தான், அல்லாஹ் மனிதனின் இயல்பிலேயே தனது நேசத்தின் சுடரை ஏற்றி வைத்தான். அதனால்தான், மனிதப் படைப்பின் ஆரம்பக் கட்டத்திலேயே ஆதமின் சந்ததியினரிடம் இறைவன், اَلَسۡتُ بِرَبِّکُمۡ நான் உங்களுடைய இறைவன் அல்லவா என்று கேள்வி எழுப்பியபோது, அதற்கு அவர்கள் بَلٰی شَہِدۡنَا ஆம், ஏன் இல்லை! நாங்கள் இதற்குச் சாட்சி பகர்கிறோம் என்று பதிலளித்ததாக திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அல் அ∴ரா∴ப் 7:173)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த உண்மையை எவ்வளவு அழகான கவிதை வடிவில் எடுத்துரைக்கிறார்கள் எனப் பாருங்கள்!

“நீயே உனது கைகளால் ஆன்மாக்கள் மீது உப்பைத் தெளித்தாய். அதனால்தான் இந்தத் துயருற்ற நேசர்களின் நேசக் கூக்குரல் எழுந்துள்ளது.”

இறைவன் மீதான நேசம் என்பது மனித இயல்பின் மிக ஆழமான குரலாக இருப்பதன் காரணமாகவே, ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த நேசத்தை உயிர்ப்பிக்கவும், அதன் நெருப்பைத் தூண்டவும் ‘காலத்தின் இமாம்’ என்று அழைக்கப்படும் இத்தகைய விண்ணுலக ஆளுமைகளை தோற்றுவிப்பது இறைவனின் தொன்மையான வழிமுறையாக இருந்து வருகிறது. அவர்களின் நெஞ்சங்களில் இறைநேசம் எனும் ஒளியின் சுடர்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவர்களின் இறைவணக்கங்கள், அவர்களின் தியாகங்கள், அவர்களது வாழ்வு மற்றும் அவர்களது மரணம் யாவும் முழுக்க முழுக்க அல்லாஹ்விற்காக மட்டுமே அமைந்திருக்கும். சுருங்கக்கூறின், ஒவ்வொரு காலகட்டத்தின் இமாமும் வெறும் ஓர் ஆசிரியராகவோ அல்லது வழிகாட்டியாகவோ மட்டும் இருப்பதில்லை. மாறாக, அவர் இறைநேசத்தின் உயிருள்ள தோற்றமாகவும், தம் காலகட்டத்து இறைநேசர்களின் கிரீடமாகவும் விளங்குகிறார்.

அவர்களது தூய வாழ்க்கையை நாம் பார்ப்போம் என்றால், அவர்கள் ஒவ்வொருவரிடமும் இறைநேசம் என்பது ஒரு தனித்துவமான மகிமையுடன் மிளிர்வதைக் காண முடிகிறது. உதாரணமாக, இறைவனின் பேரன்பிற்குரிய தோழரான ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நாம் காண்கிறோம். அவர் தமது இறைவனின் கட்டளையேற்று தமது தாயகத்தைத் துறந்தார். பின்னர் தமது இறைவனின் விருப்பத்திற்காக மனைவியையும் பால்குடி மாறாத மகனையும் தண்ணீர் இல்லாத ஒரு வறண்ட பள்ளத்தாக்கில் விட்டு வந்தார். மேலும், முதுமைப் பருவத்தில் தமது குலக்கொழுந்தையும் இறைவழியில் தியாகம் செய்யத் துணிந்தார். எத்தகைய நன்றியுணர்வை வெளிப்படுத்தினார் என்றால், அர்ஷின் இறைவன் اِبۡرٰہِیۡمَ الَّذِیۡ وَفّٰۤی (இப்ராஹீம் நன்றி உணர்வின் கடமையை முழுமையாக நிறைவேற்றி விட்டார் என்று சாட்சி பகர்ந்தான். (அந்நஜ்ம் 53:38)

பின்னர், அதே கலீலுல்லாஹ்வின் புனிதப் புதல்வரான ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களைப் பாருங்கள்! முதிய தந்தை தாம் கண்ட கனவைக் குறிப்பிட்டபோது, அந்த நற்பேறு பெற்ற மகன் உடனடியாக இறை திருப்திக்கு முன்னால் தம் தலையைச் சாய்த்து, யா அப(த்)தி∴ப்அல் மா து∴மர் - என் அன்புத் தந்தையே! உங்களுக்கு என்ன கட்டளை இடப்பட்டுள்ளதோ அதையே செய்யுங்கள் என்று கூறினார்.

பின்னர், இதே ஆன்மிகத் தொடரில் ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) மற்றும் ஹஸ்ரத் ய.ஃகூப் (அலை) எனும் தூய ஆளுமைகளைக் காண்கிறோம். அவர்கள் வெளிப்படையில் இவ்வுலகில் வாழ்ந்த போதிலும், அவர்களின் உள்ளங்கள் மறுமையின் நினைவாலும், இறைதிருப்தியைத் தேடும் தேட்டத்தாலும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இறைவனும் அவர்களின் இந்தத் தனித்துவமான பண்பின் காரணமாக அவர்களைத் தேர்ந்தெடுத்து, إِنَّآ أَخۡلَصۡنَٰهُم بِخَالِصَةٖ ذِكۡرَى ٱلدَّارِ நிச்சயமாக, நாம் அவர்களை (மறுமை) வீட்டைப் பற்றிச் சிறப்பாக நினைவூட்டுவதற்காகவே அவர்களை தேர்ந்தெடுத்தோம் என்று கூறியுள்ளான். (சூரா ஸாத் 38:47)

பின்னர், ஹஸ்ரத் யூஸு.ஃப் (அலை) அவர்களின் அருளுக்குரிய இருப்பு பிரகாசித்து வெளிப்பட்டது. அந்த உண்மையான நபி, முற்றிலும் தனிமையில் இருந்தபோது பாவத்தின் பக்கம் அழைக்கப்பட்டபோது சிறைவாசத்தின் கடுமையான துயரங்களை ஏற்றுக் கொண்டாரே தவிர, அல்லாஹ் விதித்த வரம்புகளை மீறுவதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை.

قَالَ رَبِّ ٱلسِّجۡنُ أَحَبُّ إِلَيَّ مِمَّا يَدۡعُونَنِيٓ إِلَيۡهِۖ

என் இறைவா! இவள் என்னை எதன் பக்கம் அழைக்கிறாளோ அதைவிட சிறைக்கு செல்வது எனக்கு மிகவும் விருப்பமானது என்று வேண்டினார். (சூரா யூஸு.ஃப் 12:34)

பின்னர், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மகத்தான இருப்பு தென்படுகிறது. அந்த கலீமுல்லாஹ்வின் உள்ளத்தில் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான ஆர்வம் எத்தகைய மகிமையுடன் அலைமோதியது என்றால், இறைவன் தனது முன்னிலையில் வருகை தருமாறு கட்டளையிட்டபோது, நேசம் மற்றும் பேரார்வத்தின் காரணமாகத் தமது சமுதாயத்தினரை விடவும் முன்னோக்கி விரைந்து வந்து விட்டார்.

هُمۡ أُوْلَآءِ عَلَىٰٓ أَثَرِي وَعَجِلۡتُ إِلَيۡكَ رَبِّ لِتَرۡضَىٰ

என் சமூகம் என் பின்னால் வந்து கொண்டிருக்கிறது. என் இறைவா! நீ திருப்தியடைய வேண்டும் என்பதற்காக நான் உன்னிடம் விரைந்து வந்து விட்டேன் என்று கூறினார். (தாஹா: 85)

இந்த அவசரம் எந்தவோர் உலகியல் நோக்கத்திற்காகவும் இருக்கவில்லை. மாறாக, இது, தமது இறைவனுடைய விருப்பத்தின் பக்கம் தவிப்புடன் விரைந்த ஒரு நேசரின் உள்ளமாகும்.

பின்னர், ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் தமது தனிமைகளில் தமது இறைவனிடம் அவனது அன்பையே வேண்டியவாறு, اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ حُبَّكَ அல்லாஹ்வே! நான் உன்னிடம் உனது அன்பைக் கேட்கிறேன் என்று துஆ செய்தார்கள். (ஸுனன் திர்மிதி).

ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்களைப் பாருங்கள்! அவர்களுக்குக் கிடைத்த அரசாட்சியும், இவ்வுலகின் அருட்கொடைகளும் (இறைவனை) மறக்கடிக்கப்பதாக மாறவில்லை. மாறாக, அவை இறைவனை நினைவு கூர்வதற்கு வழிவகையாக அமைந்தன. அதனால்தான் அன்னார், فَقَالَ إِنِّيٓ أَحۡبَبۡتُ حُبَّ ٱلۡخَيۡرِ عَن ذِكۡرِ رَبِّي (நான் இவ்வுலகின் நல்ல பொருட்களை ஏன் நேசிக்கிறேன் என்றால் அவை எனக்கு எனது இறைவனை நினைவூட்டுகின்றன என்று கூறினார்கள். (சூரா ஸாத் 38:33)

பிறகு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பாருங்கள்! அவர்கள் சிலுவையின் கசப்பான, வேதனைமிக்க தருணத்திலும் தமது எஜமானனான இறைவனிடம், என் தந்தையே! உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரத்தை என்னை விட்டு அகற்றும். ஆயினும் என்னுடைய விருப்பத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும் என்று வேண்டினார். (லூக்கா: அதிகாரம் 22, வசனம் 42). அதாவது, அந்த உண்மை நேசரின் இறுதி முடிவு என்னவாக இருந்தது என்றால், துன்பம் மற்றும் சோதனையின் பாத்திரத்தைக் கடந்து செல்வதுதான் உண்மையான நேசத்திற்குரிய இறைவனின் விருப்பம் என்றால், அந்த திருப்தியே நிறைவேறட்டும் என்பதாகும்.

இது எத்தகையதொரு தூய்மையான தொடர் என்றால், இதில் ஒவ்வொரு காலகட்டத்தின் இமாமும், இறைவனின் ஒவ்வொரு நபியும் இறை நேசத்தின் ஒரு தனித்துவமான மகிமையைக் காண்பித்துள்ளார்கள். சில இடங்களில் நன்றியுணர்வு தென்படுகிறது என்றால், சில இடங்களில் தியாகம் தென்படுகிறது. சில இடங்களில் மறுமையின் நினைவு தென்படுகிறது என்றால், சில இடங்களில் திக்ரும் துஆவும் தென்படுகிறது. சில இடங்களில் இறைநெருக்கத்திற்கான தவிப்பு தென்படுகிறது என்றால், சில இடங்களில் தனது விருப்பங்களை இறைதிருப்தியில் அர்ப்பணித்து விடும் துணிவு




தென்படுகிறது. ஆனால், இறைநேசத்தின் நிறைவு, முழுமை மற்றும் மிக பிரகாசமான முன்மாதிரி எந்தப் புனித ஆளுமையிடம் வெளிப்பட்டது என்ற கேள்வி எழும் போது, அனைத்துப் பார்வைகளும் அந்தப் பிரகாசமிக்க நுபுவ்வத்தின் சூரியனை நோக்கியே திரும்புகின்றன. அவரைத்தான் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என அனைத்துத் திசைகளிலும் வாழும் எல்லா சமுதாயங்களுக்கும், கியாமத் நாள் வரை வரவிருக்கும் அனைத்துக் காலகட்டங்களுக்கும் இமாமாக அல்லாஹ் ஆக்கினான். அவர்தான் நம்முடைய எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

அன்னாரது நேசத்தின் அந்தஸ்தையும், இறைநேசத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பாரசீகக் கவிதையில் எத்தகைய மனங்கவர்ந்த நடையில்

எடுத்துரைத்துள்ளார்கள் எனப் பாருங்கள்! அன்னார் கூறுகிறார்கள்: “எவரது உயிர், என்றும் நிலைத்திருக்கும் இறைவனை நேசிக்கக் கூடியதாக இருந்ததோ, எவரது ஆன்மா உண்மையான நேசத்திற்குரியவனாகிய பிரியமான (இறை)வனுடன் ஒன்றியிருந்ததோ, எவரது ஒளியினால் மனிதர்களின் உள்ளங்கள் சூரியனை விடவும் அதிகப் பிரகாசமாக மாறினவோ, அவர்தான் இறுதிக் காலத்தின் அஹ்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள்.”

இக்கவிதைகளில் எத்தகைய நேசத்தின் அந்தஸ்து சித்தரிக்கப்பட்டுள்ளதோ, அது வெறும் கவித்துவமான அழகுரை மட்டுமல்ல. மாறாக, அது முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வின் ஓர் உயிருள்ள உண்மைத்தன்மை ஆகும். இறைநேசத்தின் இந்த ஒளியானது, நுபுவ்வத்தை அறிவிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அன்னாரது தூய உள்ளத்தில் பிரகாசித்து விட்டது. மக்காவின் சூழல் ஷிர்க் மற்றும் சிலை வழிபாட்டினால் மாசுபட்டிருந்த போதும், மனித உள்ளங்கள் சடங்கு சம்பிரதாயங்களில் சிக்கியிருந்த போதும், அந்த நேரத்தில் இந்தத் தூய உள்ளம் கொண்ட இளைஞர் இந்த அனைத்து ஆரவாரங்களிலிருந்தும் விலகி, தனிமையில் தமது இறைவனின் பக்கம் ஈர்க்கப்பட்டுச் சென்று கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் அந்தக் காலகட்டத்து நிலையை படம்பிடித்துக் காட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

حُبِّبَ إِلَيْهِ الْخَلَاءُ وَكَانَ يَخْلُو بِغَارِ حِرَاءٍ

அதாவது, அன்னாரது உள்ளத்தில் தனிமையின் மீது (ஓர்) அன்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அன்னார் ஹிரா குகையில் தனிமையில் இருக்கலானார்கள்.

ஆனால், இந்தத் தனிமை என்பது ஏதோ ஒரு சலிப்பின் காரணமாகவோ அல்லது வெறுமனே ஒதுங்கியிருப்பதன் பெயரோ அல்ல. மாறாக, அது இறைநேசத்தின் உட்புற ஈர்ப்பாகும், அது அன்னாரை உலகியல் ஆரவாரங்களிலிருந்து பிரித்துத் தனது இறைவனுடன் இணைத்தது. அதனால்தான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

فَيَتَحَنَّثُ فِيهِ، وَهُوَ التَّعَبُّدُ اللَّيَالِيَ ذَوَاتِ الْعَدَدِ

அதாவது, அன்னார் ஹிரா குகையில் இறை-வணக்கத்தை (தஹன்னுஸ்) மேற்கொள்வார்கள் ‘தஹன்னுஸ்’ என்பதன் பொருள் எத்தகைய இறைவணக்கம் என்றால், அது சில கணங்கள் கொண்ட இறைவணக்கம் கிடையாது. மாறாக அது பல இரவுகள் தொடர்ந்து செய்யக்கூடிய இறைவணக்கம் ஆகும். எனவே, இந்தத் தனிமைகளும், பல இரவுகளின் இறைவணக்கங்களும், இந்த ஆன்மிக முயற்சிகளும் தமது முழுமையை அடைந்தபோது, இறைவனும் தனது இந்த உண்மை நேசரை தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

حَتَّى جَاءَهُ الْحَقُّ وَهُوَ فِي غَارِ حِرَاءٍ

ஹிரா குகையில் அன்னார் இருக்கும் போதே அன்னாரிடம் உண்மை (அதாவது இறை வஹீ) வந்தது.

இதே உண்மைத்தன்மையை திருக்குர்ஆன் சூரா ளுஹா இவ்வாறு எடுத்துக் கூறுகிறது.

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدَىٰ

(அதாவது, அவன் உம்மை உம் சமுதாயத்திடம் கொண்ட அன்பினால் தம்மையே இழந்தவராகக் கண்டான். எனவே அவன் உமக்கு அவர்களைத் திருத்தும் வழியைக் காட்டினான்.)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு மிக நுட்பமான, நேசம் நிறைந்த பொருளை எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்: இந்த இடத்தில் ‘ழால்’ என்பதன் பொருள் வழிதவறியவர் என்பது அல்ல. மாறாக, அது அன்பின் உச்சக்கட்டத்தைக் குறிப்பதாகும். “.....அல்லாஹ்வின் மீதான நேசத்தில் உம்மை முற்றிலும் லயித்தவராகக் கண்டபோது உம்மைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்” என்பதாகும். (ஆதாரம்: ஆயினாயே கமாலாதே இஸ்லாம், ருஹானீ கஸாயின், தொகுதி 5, பக்கம் 170-171)

ஹிரா குகையின் தனிமைகளில் வெளிப்பட்ட இறைநேசத்தின் அந்த ஒளி, அன்னார் நபியாக நியமிக்கப்பட்ட பிறகு அன்னாரது இறைவணக்கங்கள், துஆக்கள் மற்றும் நள்ளிரவுத் தொழுகைகள் ஆகியவற்றில் ஒரு தொடர்ச்சியான நீர்வீழ்ச்சியாகப் பாய்ந்தோடத் தொடங்கியது. பெருமானார் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் என்பது ஏதோ கடமைக்காகச் செய்யும் ஒரு சடங்காக இருக்கவில்லை. பல மணி நேரங்கள் இறைவணக்கத்தின் பேரின்பத்தில் திளைத்தவாறு நின்று கொண்டிருப்பார்கள். ஆயினும் துஆக்களால் உள்ளம் திருப்தியடையாது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும்போது,

كَانَ يَقُومُ مِنَ اللَّيْلِ حَتَّى تَتَفَطَّرَ قَدَمَاهُ

அதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் இரவில் எத்துணை நீண்ட நேரம் நின்று இறை வணக்கம் செய்வார்கள் என்றால், அன்னாரது அருளுக்குரிய பாதங்கள் வீங்கி, (அதில்) வெடிப்பு ஏற்படத் தொடங்கி விடும் என்று குறிப்பிடுகிறார்கள்.

இதே போன்று மற்றொரு சந்தர்ப்பத்தில், பெருமானார் (ஸல்) அவர்களின் இரவு நேர இறைவணக்கம் குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அவர்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தொழுகையின் அழகு, அச்சத்துடனும் பணிவுடனும் கூடிய தன்மை மற்றும் நீண்ட நேரம் நிற்கும் நிலை ஆகிய அனைத்தையும் ஒரே வாக்கியத்தில் சுருக்கி கூறும்போது,

فَلَا تَسْأَلْ عَنْ حُسْنِهِنَّ وَطُولِهِنَّ

அதாவது, அன்னாரது தொழுகையின் அழகையும் அதன் நீளத்தையும் பற்றி என்னிடம் கேட்காதீர்கள் (அதை விளக்க வார்த்தைகளே இல்லை,) எனவே எதுவும் கேட்க வேண்டாம் என்றார்கள்.

இதே போன்றதோர் அழியாத ஓர் அறிவிப்பு ஹஸ்ரத் ஹுஸை..்பா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஓர் இரவில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து ந..்பில் தொழும் நல்வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் கூறுகிறார்கள்: ஹுஸூர் (ஸல்) அவர்கள் சூரா அல்பகராவைத் தொடங்கினார்கள். அப்போது நான், அன்னார் ஒருவேளை நூறு வசனங்கள் ஓதிய பின் ருகூவு செய்வார்கள்

என்று எண்ணினேன். ஆனால் அன்னார் தொடர்ந்து ஓதினார்கள். பின்னர் நான், ஒருவேளை சூரா அல் பகராவை முழுமையாக ஓதி முடித்து ருகூவு செய்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் அன்னார் சூரா அல் பகராவை நிறைவு செய்த பிறகு சூரா அந்நிஸாவையும், அதன் பின்னர் சூரா ஆல இம்ரானையும் முழுமையாக ஓதி முடித்தார்கள்.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதி முடித்தது திருக்குர்ஆனின் ஐந்து ஜுஸ்களையும் விட அதிகமாகும்.

ஹஸ்ரத் ஹுஃதை..பா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

يَقْرَأُ مُتَرَسِّلًا அதாவது, அன்னார் நிறுத்தி நிதானமாகத் திலாவத் செய்தார்கள். எங்கு தஸ்பீஹ் (இறைவனை புகழும்) வசனம் வருகிறதோ அங்கு புகழ்வார்கள். எங்கு துஆவின் வசனம் வருகிறதோ அங்கு துஆ செய்தார்கள். எங்கு பாதுகாப்புத் தேடும் வசனம் வருகிறதோ அங்கு பாதுகாப்புத் தேடினார்கள். சுருங்கக்கூறின், பெருமானார் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் என்பது தமது இறைவனுடன் நிகழ்த்தும் ஓர் உயிருள்ள உரையாடலாக இருந்தது. அதில் ஒவ்வொரு வசனத்திலும் உள்ளம் இறைவனின் முன்னிலையில் குனிந்தது. ஆன்மா, துஆவின் இன்பத்தைப் பெற்றது.

மேலும், இந்த இறை வணக்கங்களில் நீண்ட நேரம் நின்றது மட்டுமன்றி உள்ளத்தின் உருக்கமும் நிறைந்திருந்தது. அதனால்தான் ஒரு ஸஹாபி, பெருமானார் (ஸல்) அவர்களின் தொழுகையிலிருந்த அழுதழுது மன்றாடிய காட்சியை படம்பிடித்துக் காட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

لِجَوْفِهِ أَزِيزٌ كَأَزِيزِ الْمِرْجَلِ مِنَ الْبُكَاءِ

அதாவது, அழுகையின் காரணமாக அன்னாரது அருளுக்குரிய நெஞ்சிலிருந்து கொதிக்கும் பாத்திரத்தில் இருந்து வரும் சத்தத்தைப் போன்றதொரு சத்தம் வந்து கொண்டிருந்தது.

இரவின் தனிமைகளில் அன்னாரது உள்ளம் தமது இறைவனின் முன்னிலையில் துஆக்களை செய்வதற்காகத் தவிப்புடன் இருக்கும். ஓர் இரவில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களைத் தமக்கு அருகில் காணாதபோது, அன்னார் ஒருவேளை தமது வேறு ஏதேனும் ஒரு மனைவியிடம் சென்றிருக்கலாம் என்று எண்ணினார்கள். தேடிப் பார்த்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தமது இறைவனின் முன்னிலையில் சஜ்தாவில் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். அன்னார் சஜ்தாவில்

سُبْحَانَكَ وَبِحَمْدِكَ، لَا إِلٰهَ إِلَّا أَنْتَ

(நீ தூயவன், உன்னைப் போற்றிப் புகழ்கிறேன் உன்னைத் தவிர வேறு இறைவனில்லை) என்று துஆ செய்து கொண்டிருந்தார்கள். இந்த காட்சியைக் கண்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தன்னிச்சையாக,

بِأَبِي أَنْتَ وَأُمِّي، إِنِّي لَفِي شَأْنٍ وَإِنَّكَ لَفِي آخَرَ

"என் தாய் தந்தையர் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! ஏதேனும் உலகியல் காரணத்திற்காகவே தங்களுடைய உடல் படுக்கையை விட்டுப் பிரிந்திருக்கும் என்று நான் வேறு விதமாக எண்ணி விட்டேன். ஆனால் தாங்களோ ஒரு மாபெரும் ஆன்மிக நிலையில் இருக்கிறீர்கள்!" என்று கூறினார்கள்.

இந்த இறைநேசம் என்பது இறைவணக்கங்கள், துஆக்களோடு மட்டும் வரையறைக்குட்பட்டதாக ஆகி விடவில்லை. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களின் ஒட்டு -மொத்த வாழ்க்கையுமே இந்த அன்பின் வெளிப்பாடாகவே விளங்கியது. இவ்வுலகின் யதார்த்தம் அன்னாரது பார்வையில் எவ்வாறு இருந்தது என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உடலில் பாயின் தழும்புகளைக் கண்டபோது உள்ளம் உருகி அழுதார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ, உமரே! எனக்கும் இந்த உலகிற்கும் என்ன தொடர்பு? எனது உதாரணமோ, ஒரு மரத்தின் நிழலில் சிறிது நேரம் தங்கி இளைப்பாறி விட்டு, பின்னர் தன் பயணத்தைத் தொடரும் ஒரு வழிப்போக்கனைப் போன்றதே ஆகும் என்று கூறினார்கள்.

உஹுத் போர்க்களத்தில் அன்னாரது தூய உடல் காயமுற்ற போதும், எதிரிகளின் மறுதாக்குதலுக்கான அபாயம் கண்முன்னே நின்ற போதும், கா..பிர்கள் தங்களது சிலையின் முழக்கமாக, أُعْلُ هُبَل ஹுபலின் மகிமை ஓங்கட்டும் என்று கூச்சலிட்ட போது, ஏகத்துவத்தின் மீதிருந்த தன்மானம் இந்த இறைநேசரை மௌனமாக இருக்க விடவில்லை. உடனடியாக, பதிலளியுங்கள்: اَللّٰهُ أَعْلٰى وَأَجَلُّ "அல்லாஹ்வே மிக உயர்ந்தவனும், மிக மாண்பு மிக்கவனும் ஆவான்" என்று முழங்க உத்தரவிட்டார்கள்.

மேலும், இவ்வுலகை விட்டுப் பிரியும் அந்த இறுதித் தருணம் வந்தபோதும், அன்னாரது உள்ளம் உலகத்தின் பக்கம் சாயவில்லை. செல்வத்தின் மீதோ, ஆட்சியின் மீதோ எவ்வித ஆசையும் இருக்கவில்லை. எந்தவோர் உலகியல் ஆதரவின் மீதும் நாட்டம் கொள்ளவில்லை. அந்த உண்மை நேசரின் இறுதி முழக்கமும் கூட,

اَللّٰهُمَّ الرَّفِيْقَ الْأَعْلٰى

அல்லாஹ்வே! மிக உயர்ந்த தோழனே! இப்போது நான் உனது நெருக்கத்தையும் உனது அருகாமையையுமே ஆவலுடன் விரும்புகிறேன் என்றார்கள்.

இறைநேசத்தின் இந்த முழுமை, நிறைவு மற்றும் பரிபூரணமான முன்மாதிரி ஹஸ்ரத் முஹம்மது முஸ்த..பா (ஸல்) அவர்களின் மூலமாக உலகிற்கு முன்னால் வெளிப்பட்டபோது, இறை நேசத்தைத் தேடுபவர்களுக்கு அல்லாஹ் கியாமத் நாள் வரை இவ்வாறு அறிவித்தான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

அதாவது, இறைநேசத்தை தேடுவோரே! நீங்கள் உண்மையான நேசத்திற்குரியவனின் நெருக்கத்தைப் பெற விரும்பினால், இறைநேசத்தின் இரகசியங்களையும் நுட்பங்களையும் கற்றுக் கொள்ள விரும்பினால், இறைவனின் ஆகப் பெரும் நேசரான (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுங்கள். எவர் அன்னாரது அன்பில் அர்ப்பணமாகி, அன்னாரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறாரோ, அவரே இறைநேசத்தின் பானத்தை பருகுவார்.

(தொடரும்...)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



12

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### நான்காவது அத்தியாயம்

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ   الرَّحْمٰنِ الرَّحِيْمِ   مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

(அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன், அர்ரஹ்மானிர் ரஹீம், மாலிகி யவ்மித்தீன் ஆகிய வசனங்கள் தொடர்பான விளக்கவுரை

எனவே இவை முந்தைய நூற்றாண்டுகளில் காணப்படாத அத்தகைய காரணிகள் ஆகும் என்று நாம் சாட்சி கூறுவது நம் மீது கடமையாகும். இது ஒரு வசதியும், எளிதானதும் ஆகும். இதற்கு நிகரானதை எந்தக் காதும் கேட்கவில்லை; இதற்கு நிகரானதை எந்தக் கண்ணும் காணவில்லை. எனவே நீர் நமது உயர்ந்த ரப்பின் ரஹீமிய்யத்தைப் பார்ப்பீராக. நமது முன்னோர்கள் பல ஆண்டுகளிலும் எழுத ஆற்றல் இல்லாத அளவிலான ஏராளமான நூல்களை நாம் சில நாட்களிலேயே நமது மார்க்கத்தைப் பற்றிய நூல்களை அச்சிடுவது சாத்தியமாகி விட்டது. இது அவனுடைய رَحِيْمِيَّت (ரஹீமிய்யத் - முயற்சிக்கேற்ற நற்கூலி வழங்குவது) என்பதேயாகும். முன்னர் இருந்த மக்கள் தமது உயிர்களை கடினத்தில் ஆழ்த்திக் கொண்டு ஆண்டாண்டு காலமாக உழைத்துச் செய்திகளைப் பெற்று வந்தனர். ஆனால் இன்று நாம் பூமியின் தொலைவிலும், அருகிலும் இருக்கின்ற ஊர்களின் செய்திகளை சில மணிகளில் தெரிந்து கொள்வது சாத்தியமாகி இருக்கிறது.★

அவன் ஒவ்வொரு நன்மைக்காகவும் நம் மீது رُبُوْبِيَّت (ருபூபிய்யத் - படைத்துப் பரிபாலிப்பது), رَحْمٰنِيَّت (ரஹ்மானிய்யத் - சுயமாக அருள்பாலிப்பது) رَحِيْمِيَّت (ரஹீமிய்யத் - நற்செயலுக்கேற்ற நற்கூலி வழங்குவது) ஆகியவற்றின் வாசல்களைத் திறந்து விட்டான். மேலும் அவற்றுக்கு எத்தனை அதிகமான வழிகள் இருக்கின்றன என்றால், அவற்றை கணக்கிடுவது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். மேலும் த.்.வத் (இறைவன் பக்கம் அழைப்பது), மற்றும் தப்லீக் (கொள்கையைப் பரப்பும்) பணியை செய்பவர்களுக்கு இந்த வசதிகள் இதற்கு முன்னர் எங்கே கிடைத்திருந்தது? நமக்காக பூமி கடுமையாக அசைக்கப்பட்டு விட்டது. எனவே அது தனது சுமையை வெளியேற்றி விட்டது. மேலும் ஆறுகள் ஓடச் செய்யப்பட்டு விட்டன. மேலும் நதி வறண்டு விட்டது. புத்தம் புதிய வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. மேலும் ஒட்டகங்கள் கைவிடப்பட்டு விட்டன.

மேலும் நாம் பார்த்த இத்தகைய இறையருள்களை முன்னவர்கள் பார்த்திருக்கவில்லை. ஒவ்வோர் அடியிலும் ஓர் அருள் இருக்கிறது. மேலும் இந்த அருள்கள் எல்லைக்கும், கணக்கீட்டிற்கும் அப்பாற்பட்டதாகும். ஆனால் அத்துடனேயே உள்ளங்களின் மரணமும், கல் நெஞ்சும் அதிகமாகி விட்டது. எல்லா மக்களும் இறந்து விட்டனர். மேலும் அவர்களிடம் ஒரு சிலரைத் தவிர இறைஞானத்தின் ஆன்மா இல்லை. 'சிலரைத் தவிர' என்பதன் பொருள், மிக, மிக அரிதாக இருக்கின்ற காரணத்தால் அது இல்லாமைக்குச் சமமானதாகும். எனவே நாம் முன்னர் குறிப்பிட்டிருக்கின்ற இந்தப் பண்புகள் வெளிப்பட்டிருப்பதால், 'ருபூபிய்யத்' (படைத்துப் பரிபாலிப்பது), 'ரஹ்மானிய்யத்' (சுயமாக அருள்பாலிப்பது), 'ரஹீமிய்யத்' (நற்செயலுக்கேற்ற நற்கூலி வழங்குவது) ஆகிய ஒளிமிக்க அடையாளங்களைப் போன்று தோன்றியதாலும், பின்னர் ஏராளமான மரணங்கள், வழிகேடுகள் எனும் விஷத்தின் காரணமாக மக்கள் மரணிப்பதன் மூலமாக, (மரணத்தில் இருந்து) விழித்தெழுகின்ற, ஒன்று சேர்க்கப்படுகின்ற நாள் அண்மையில் இருக்கிறது. இன்னும் கூறுவதாயின், இந்த அடையாளங்கள், காரணிகள் தோன்றியதால் வெளிப்படுவது போன்று, அ(ந்த நாளான)து வாசலில் இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொண்டோம்.

ஏனெனில் 'ருபூபிய்யத்' (படைத்துப் பரிபாலிப்பது), 'ரஹ்மானிய்யத்' (சுயமாக அருள்பாலிப்பது), 'ரஹீமிய்யத்' (நற்செயலுக்கேற்ற நற்கூலி வழங்குவது) ஆகியவை கடல்களின் அலையைப் போன்று அலையெழுப்பிக் கொண்டிருக்கின்றன. மேலும் அவை வெளிப்பட்டு விட்டன. மேலும் அடுத்து அடுத்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆறுகளைப் போன்று ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே சந்தேகமின்றி, இப்போது எழுப்பப்படுகின்றதும், ஒன்று சேர்க்கப்படுகின்றதுமான காலம் வந்து விட்டது. மேலும் இந்த சுன்னத் (நடைமுறை) خَيْرُ الْاَنَام (கைருல் அனாம் - மக்களில்

★ يَوْمَئِذٍ تُحَدِّثُ اَخْبَارَهَا (யவ்மயிஸின் துஹத்திஸு அக்பாரகா - அந்த நாளில் அது தன் (மறைவான) செய்திகளை எடுத்துரைக்கும் - நூலாசிரியர். (99:5 காண்க)

சிறந்தவர் முஹம்மது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சஹாபிகளைக் கடந்து சென்று விட்டது. மேலும் சந்தேகமின்றி, இந்தக் காலம்தான் يَوۡمُ الدِّيۡنِ (யவ்முத் தீன் - நற்பலன், தண்டனைக்குரிய) நாள் ஆகும். மேலும் எழுப்படுகின்ற நாளும், வானங்களுடைய இறைவனின் مَالِكِيَّتْ (மாலிகிய்யத் - அதிபதி) நாள் ஆகும். மேலும் பூமியில் வாழ்கின்றவர்களின் உள்ளங்களில் இந்தப் பண்புகளின் அடையாளங்கள் வெளிப்படும் நாள் ஆகும். மேலும் சந்தேகமின்றி, இந்தக் காலம் اَحۡكَمُ الۡحَاكِمِيۡنَ (அஹ்கமுல் ஹாகிமீன் - தீர்ப்பளிப்பவர்களில் மிகச் சிறந்த தீர்ப்பளிப்பவன்) ஆகிய அல்லாஹ்வின் புறமிருந்துள்ள حَكَمٌ (ஹகம் - தீர்ப்பளிப்பவர்) ஆகிய மஸீஹின் காலமாகும். மேலும் இது மக்களின் அழிவுக்குப் பின்னர், ஒன்று சேர்க்கும் நாளாகும். மேலும் இதன் முன்மாதிரி (ஹஸ்ரத்) ஈஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் காலத்தில் கடந்து சென்று விட்டது. எனவே சிந்திப்பீராக. கவனமற்றவர்களைச் சேர்ந்தவர்களாகி விட வேண்டாம்.

## ஐந்தாவது அத்தியாயம்

### اِيَّاكَ نَعۡبُدُ وَ اِيَّاكَ نَسۡتَعِيۡنُ

(இய்யாக ந∴புது வ இய்யாக நஸ்தயீன் - நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம்)

### என்ற வசனம் தொடர்பான விளக்கவுரை

அல்லாஹ் தனது பேரருளால் ஒப்புக் கொள்கின்ற அந்த இறைவணக்கத்தின் உண்மைத்துவம் என்னவெனில், அல்லாஹ்வின் மகத்துவம், அவனுடைய உயர்ந்த மகிமையைப் பார்த்து முழுமையான தன்னடக்கத்தை மேற்கொள்வது, அவனது கருணைகள், பலவிதமான பேரருள்களைப் பார்த்து அவனைப் புகழ்வது, போற்றுவது, அவனிடத்தில் அன்பு கொண்டவாறு, அவனது மேன்மைகளையும் அழகுகளையும், ஒளியையும் பற்றி சிந்தித்தவாறு எல்லாவற்றின் மீதும் அவனுக்கு முன்னுரிமை வழங்குவது, அவனது சுவர்க்கங்களை கண்முன் நிறுத்தியவாறு, தனது உள்ளத்தை ஷைத்தானின் தீய எண்ணங்களிலிருந்து தூய்மையாக்குவது ஆகியவை ஆகும் என்பது தெளிவாகட்டும். மேலும் இறைவணக்கங்களில் அனைத்தையும் விட மிகச் சிறந்தது என்னவெனில், மனிதன் ஐவேளை தொழுகைகளை முதன்மையான நேரங்களில் நிறைவேற்றுவதைப் பாதுகாப்பது ஆகும். மேலும் கடமைகள், சுன்னத்துகளை நிறைவேற்றுவதை எப்போதும் மேற்கொண்டவாறு, உள்ளத்தை ஒன்றச் செய்தவாறு விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் தொழுகையின் அருள்களைப் பெறுவதில் முழுவதுமாக முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில், தொழுகை உலகத்தைப் பராமரிப்பவன் வரை இறையடியாரைக் கொண்டு செல்கின்ற வாகனம் ஆகும். அடியார் சிறந்த, விரைவாக ஓடுகின்ற குதிரைகளின் முதுகில் ஏறியமர்ந்தாலும் சென்றடைய முடியாத அந்த இடம் வரை சென்றடைந்து விடுகிறார். இந்தத் தொழுகைகளின் கனிகள் அம்புகளால் வேட்டையாடப்பட முடியாது. மேலும் அவற்றின் உண்மை நிலை எழுதுகோல்களின் மூலமாக வெளிப்படுவ-தில்லை. எவர் இந்த வழிமுறையை கட்டாயமாக்கிக் கொண்டாரோ, அவர் உண்மையையும், வாய்மையையும் பெற்று விட்டார். மேலும் அவர் மறைவு எனும் திரைகளில் இருக்கின்ற அந்த நேசத்திற்குரியவனை அடைந்து விட்டார். மேலும் அவர் சந்தேகத்திலிருந்தும், ஐயத்திலிருந்தும் ஈடேற்றம் பெற்று விட்டார். எனவே நீர் அவர்களின் உள்ளத்தை ஒளிமிக்கதாகவும், அவர்களின் கூற்றை முத்தாகவும், அவரது முகத்தை முழு நிலாவாகவும், அவரது அந்தஸ்தை அரியணையாகவும் காண்பீர். மேலும் எவர் அல்லாஹ்வுக்காக தனது தொழுகைகளில் தன்னடக்கத்தைக் காட்டுவாரோ, அல்லாஹ் அவர்களுக்கு முன்னால் மன்னர்களைக் குனிய வைத்து விடுகிறான்; மேலும் அந்த அடிமையை எஜமானர் ஆக்கி விடுகிறான்.

பிறகு அல்லாஹ், اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ (அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் - அனைத்துலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்ற தனது கூற்றில் முதன் முதலில் தன்னைப் பற்றிய புகழைக் கூறியிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பின்னர் அவன், اِيَّاكَ نَعۡبُدُ وَ اِيَّاكَ نَسۡتَعِيۡنُ (இய்யாக ந∴புது வ இய்யாக நஸ்தயீன் - நாங்கள் உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்) என்ற தனது வழிகாட்டலுடன் மக்களுக்கு இறைவணத்தின் பக்கம் ஆர்வமூட்டியிருக்கிறான். மேலும் இதில், எவர் (இறைவனாகிய) அவனை உரிய முறையில் புகழ்கின்றாரோ, அவர்தான் உண்மையில் عَابِدٌ (ஆபிது - இறைவணக்கம் செய்பவர்) ஆவார் என்பதன் பக்கம் சுட்டிக் காட்டியிருக்கிறான். எனவே இந்த துஆ மற்றும் வேண்டுதலின் சுருக்கம் என்னவெனில், இறைவணக்கத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஒவ்வொரு மனிதனையும் அல்லாஹ் اَحۡمَدُ (அஹ்மது - அல்லாஹ்வை அதிகமாகப் புகழக்கூடியவர்) ஆக ஆக்கி விடுகின்றான். இந்த அடிப்படையில் இந்த உம்மத்தின் இறுதியில் முதலாம் ‘அஹ்மது’ ஆகிய ஈருலகத்தின் தலைவர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலடியைப் பின்பற்றிய ஓர் ‘அஹ்மது’ பிறக்க வேண்டியது கட்டாயமானதும், அவசியமானதுமாக இருந்தது. (∴பாத்திஹா சூராவில் செய்யப்பட்ட) மேற்கூறப்பட்ட துஆ என்பது, துஆக்களை ஏற்றுக் கொள்கின்றவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது என்று புரிந்து கொள்வதற்காகவும், அந்த ‘அஹ்மது’ என்பவரின் தோற்றம், துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதற்கு அடையாளங்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு நடைபெற வேண்டியது அவசியமாக இருந்தது.

எனவே இவரே, சூரா ∴பாத்திஹாவிலும் திருக்குர்ஆனி-லும் எழுதப்பட்டுள்ள இறுதிக் காலத்தில் தோன்றுவதாக வாக்குறுதி வழங்கப்பட்ட அந்த மஸீஹ் ஆவார். பிறகு ஓரிறைவனிடமிருந்து ‘தவ்∴பீக்’ (நல்வாய்ப்பு) இல்லாமல் எந்த அடியாருக்கும் இறைவணக்கத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்ற சைகையும் இந்த வசனத்தில் இருக்கிறது. இறைவணக்கத்தின் கிளைகளில் ஒன்று, நீர் உமது மகன்களின் மீது அன்பு செலுத்துவதைப் போன்று, உம்மிடம் பகைமை கொள்பவரிடம் அன்பு செலுத்துவீராக என்பதாகும். மேலும் நீர் மக்களின் தடுமாற்றங்களை

மன்னிப்பவராகவும், அவர்களின் குற்றங்களை கண்டும் காணாதிருப்பவராகவும் இருப்பீராக. மேலும் தூய்மையான, சுத்தமான, சகிப்புத்தன்மை கொண்ட உள்ளத்துடனும், அகத்தூய்மை, நன்றியுணர்வு, உண்மை, நன்றியறிதல் ஆகியவற்றுடன் பழித்துரைக்கப்பட்ட எல்லா பழக்கங்களை விட்டும் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ வேண்டும். மேலும் நீங்கள் எவ்வித செயற்கையுமின்றி சில தாவரங்களைப் போன்று இயல்பான சிறப்புகளைக்கொண்டவாறு அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காக பயன்படுபவர்களாக மாறி விட வேண்டும். மேலும் நீங்கள் ஆணவத்தால் உங்கள் சகோதரருக்கு துக்கம் கொடுக்காதீர்கள். எந்த விஷயத்தாலும் அவரை காயப்படுத்தவும் செய்யாதீர்கள். மாறாக, உங்களின் கோபமடைந்த சகோதரரின் கூற்றுக்கு தன்னடக்கத்துடன் விடையளிக்க வேண்டியது உங்கள் மீது கடமையாகும். பேசுவதில் அவரை ஏளனம் செய்ய வேண்டாம். மேலும் மரணிப்பதற்கு முன்பே மரணித்து விடுவீராக. மேலும் தன்னை இறந்தவர்களைச் சேர்ந்தவராக கணக்கிடுவீராக. மேலும் எவர் உம்மிடம் வந்தாலும் அவருக்கு கண்ணியமளிக்க வேண்டும் அவர் கிழிந்த ஆடைகளில் வந்தாலும் சரியே! பெருமைக்குரிய ஆடையில் இல்லாமல் இருந்தாலும் சரியே! நீங்கள் ஒவ்வொருவருக்கும் அவரை நீங்கள் அறிந்தாலும், அறியாவிட்டாலும் 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தி உண்டாவதாக) என்று கூறுங்கள். மேலும் நீங்கள் அனுதாபம் காட்டுவதற்கு, துக்கத்தில் பங்கு கொள்வதற்கு எப்போதும் ஆயத்தமாக இருங்கள்.

## ஆறாவது அத்தியாயம்

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ
صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ

(இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். சீராத்தல்லதீன அன்அம்தத் அலைஹிம் - எங்களை நேரான பாதையில் நடத்துவாயாக. நீ அருள் புரிந்தவர்களின் வழியில் நடத்துவாயாக★)

### என்ற வசனம் தொடர்பான விளக்கவுரை

இந்த வசனங்கள் நுண்ணிய கருத்துகளினால் நிறைந்த கருவூலமும் எதிர்க்கின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஓர் ஒளிமிக்க சான்றும் ஆகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் நாம் இவற்றைப் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடுவோம். மேலும் அல்லாஹ் என்ன ஆதாரங்களையும், சான்றுகளையும் நமக்குக் காட்டியிருக்கின்-றானோ அவற்றை நாம் உமக்கும் வெளிப்படுத்துவோம். எனவே அல்லாஹ் உங்களை பொய்யான சிந்தனைகளில் இருந்து காப்பாற்றுவதற்காக நீங்கள் இந்த வசனங்களின் விளக்கவுரையை கவனமாகக் கேளுங்கள். اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ (இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம்) என்ற அல்லாஹ்வின் (1:6) கூற்றைப் பொருத்தவரை, அதன் பொருள், அல்லாஹ்வே! நீ எங்களை உனது பக்கம் வரை சென்றடைய வைக்கின்ற, உனது தண்டனையிலிருந்து காப்பாற்றுகின்ற அந்த வழியில் உறுதியுடன் நிலைநிற்கச் செய்வாயாக என்பதாகும்.

சூஃபிகளின் பார்வையில் நேர்வழியைப் பெறுவதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றிற்கான சான்று இறைவனின் நெறிநூல், நடைமுறையிலிருந்து நிரூபணமா-கின்றது. அவற்றுள் முதல் வழிமுறை, ஆதாரத்துடனும், சான்றுடனும் இறைஞானத்தை வேண்டுவதாகும். இரண்டாவது வழிமுறை, பல்வேறு வணக்க வழிமுறைகளின் பயிற்சியினால் உட்புறத்தை சுத்தப்படுத்துவதாகும். மூன்றாவது வழிமுறை, மற்றெல்லா தொடர்புகளையும் முறித்தவாறு அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துவதும், இறைவன் மீதுள்ள அன்பு களங்கமற்றதாக இருப்பதும் ஆகும். நிறைவான ஒற்றுமை இருப்பது, வேற்றுமை இல்லாமல் இருப்பது, அல்லாஹ்வின் பக்கம் முற்றிலுமாக திரும்புவது, மன்றாடுவது, துஆ செய்வது, உறுதியான தைரியத்தை மேற்கொண்டவாறு படைத்தவனிடம் உதவியை வேண்டுவது ஆகியவை ஆகும்.

நேர்வழியைத் தேடுவது, நஃப்ஸை தூய்மைப் -படுத்துவது ஆகியவற்றின் வழிமுறை இமாம்கள் மற்றும் உம்மத்தைச் சேர்ந்த நேர்வழியைப் பெற்ற மக்கள் ஆகியவர்களின் மூலமாக அல்லாமல் அல்லாஹ் வரை சென்றடைவதற்குப் போதுமானதல்ல. எனவே இறைவன் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ (இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் - எங்களுக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக) என்பது வரை துஆ கற்றுத் தந்ததுடன் அவன் திருப்தியடையவில்லை. மாறாக, صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ (சிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம் - நீ அருள் புரிந்தவர்களின் வழியில்) என்று கூறியவாறு, (இறைவனால்) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், கடும் முயற்சி செய்பவர்கள், வழிகாட்டுபவர்கள், வழிநடத்துபவர்கள் ஆகியோரை தேடுவதற்கான ஆர்வத்தைத் தூண்டினான். அதாவது, ரஸூல்மார்கள், நபிமார்கள் ஆகியோரைத் தேடுவதற்கான ஆர்வத்தைத் தூண்டினான். ஏனெனில் இந்த சான்றோர்கள் பொய் மற்றும் ஏமாற்றுதல் எனும் வீட்டை விட, உண்மை மற்றும் வாய்மையின் வீட்டிற்கு முன்னுரிமை வழங்கினர். மேலும் அல்லாஹ்வின் புறமிருந்துள்ள ஒளியின் கடல் என்பது அன்பு எனும் கம்பிகளால் ஈர்க்கப்பட்டது. மேலும் அல்லாஹ்வின் வஹியினாலும், அதன் ஈர்ப்பினாலும் பொய் பூமியிலிருந்து அகற்றப்பட்டது. நுபுவ்வத்திற்கு முன்னர் அது ஆபரணங்கள் இல்லாத அழகிய பெண்ணைப் போன்று இருந்தது. (நபிமார்களாகிய) அவர்கள் அல்லாஹ் பேச வைக்காத வரை பேசுவதில்லை. மேலும் அவர்களுக்கு மிகச் சிறந்ததாக இருப்பதை மட்டுமே மேற்கொள்கின்றனர். அவர்கள் மக்களை இறைவனின் ஷரீஅத்திற்கு பொருத்த-மானவர்களாக ஆக்குவதற்கு முழு முயற்சி செய்கின்றனர்.

★ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ (அன்அம்த்த அலைஹிம் - நீ அருள் புரிந்தவர்களின் வழியில் நடத்துவாயாக 1:6) என்ற வசனத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி இருக்கின்றது. அந்த நற்செய்தி என்னவென்றால், அல்லாஹ் முந்தைய நபிமார்களுக்கு என்னவெல்லாம் வழங்கி இருந்தானோ, அவை அனைத்தையும் (முஹம்மதிய்ய உம்மத்தைச் சேர்ந்த) இவர்களுக்காகவும் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறான். எனவே வேண்டுபவர்களுக்கு நற்செய்தியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவன் நமக்கு இந்த துஆவைக் கற்றுத் தந்திருக்கிறான். எனவே முஹம்மதிய்ய கலீஃபாக்களின் தொடர் என்பது ஈஸாவுக்கு ஒப்பான ஒருவரின் தொடருடன் முடிவடைவது கட்டாயம் ஆகிறது. முஹம்மதிய்ய தொடர் என்பது, மூஸவிய்ய தொடருடன் ஒப்புமை முழுமையாக இருக்கும் பொருட்டு அவ்வாறு கட்டாயமாகிறது - நூலாசிரியர்.

ஒரு விதவை தன் மகன்களை வளர்த்துக் காப்பாற்றுவது போன்று, அவர்கள் ஷரீஅத்தின் மகன்களை வளர்த்துக் காப்பாற்றுகின்றனர். அவர்களுக்கு (நபிமார்களுக்கு) எத்தகைய பேச்சாற்றல் வழங்கப்படுகிறது எனில் அது காது கேளாதவர்களைக் கேட்கச் செய்கிறது; காட்டு ஆடுகளை அடக்கி விடுகிறது.

உறுதியான தைரியத்துடன் உம்மத்துகளை ஈர்த்துக் கொள்கின்ற அத்தகைய உள்ளம் (நபிமார்களாகிய) அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் பேசும்போது அவர்களின் அம்பு குறி தவறுவதில்லை. மேலும் அவர்கள் கவனம் செலுத்தும்போது தோல்வியடைந்த இறந்தவர்களை -யும் உயிரூட்டி விடுகின்றனர். அவர்கள் மக்களை குறைகளிலிருந்து வெளியேற்றி நன்மைகளின் பக்கமும், தடுக்கப்பட்டவற்றிலிருந்து நல்லவற்றின் பக்கமும் மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். மேலும் அவர்களின் திசையை அறியாமையிலிருந்து அகற்றி, கண்ணியம், உறுதித்தன்மை, அறிவுடைமை ஆகியவற்றின் பக்கமும், தீமை, பாவம் ஆகியவற்றிலிருந்து அகற்றி கற்புடைமை, இறையச்சம் ஆகியவற்றின் பக்கமும் திருப்பி விட விரும்புகின்றனர். எவர் (இறைனிடமிருந்து வந்த) அவர்களை மறுத்தாலும், அவர் கண்டிப்பாக தனக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட்ட மிகப் பெரிய அருட்கொடையை வீணாக்கி விட்டார். மேலும் அவர் நன்மை எனும் நீரூற்றிலிருந்தும், தனது கண்களின் ஒளியிலிருந்தும் வெகு தொலைவில் சென்று விட்டார். மேலும் இது இரத்த உறவுகளைத் துண்டிப்பது மற்றும் குடும்ப உறவுகளை துண்டிப்பது ஆகியவற்றை விடவும் மிகப் பெரியதாகும். (இறைவனால்) அனுப்பப்படுபவர்களின் இந்தக் கூட்டத்தினர் சுவர்க்கத்தின் கனிகளாக இருக்கின்றனர். எனவே இவர்களை விட்டு விட்டு, உண்பது, குடிப்பது ஆகியவற்றின் பக்கம் சாய்ந்து விடுபவர் மீது அந்தோ! பரிதாபமே!! அவர்கள் அல்லாஹ்வின் ஒளி ஆவார்கள். மேலும் அவர்கள் மூலமாக (மக்களின்) உள்ளங்களுக்கு ஒளியும், பாவங்கள் எனும் விஷத்திற்கு விஷமுறிவும் வழங்கப்படுகிறது.

மேலும் உயிர் விட்டுப் பிரிகின்ற, மூச்சுக் காற்று தொண்டையை வந்தடைந்திருக்கும் நேரத்திலும், இந்த அற்ப உலகத்தை விட்டு விடும் நேரத்திலும் மன அமைதியும், நிம்மதியும், உறுதியாக நிலைநிற்கும் நல்வாய்ப்பும் (நபிமார்களாகிய) அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த கண்ணியத்திற்குரிய கூட்டத்தைப் போன்று இன்னொரு கூட்டமும் இருக்க முடியும் என்று நீர் கருதுகின்றீரா? ஒருபோதும் அல்ல. பேரீத்தம் பழத்தின் விதையிலிருந்து பேரீத்தம் பழத்தை உருவாக்கிய அந்த இறைவன் மீது ஆணையாக! இதன் காரணமாகத்தான் அல்லாஹ் தனது மிகவும் எல்லையற்ற கருணையினால் இந்த துஆவைக்க கற்றுக் கொடுத்தான். மேலும் ஓரிறைவனிடம் இருந்து நபிமார்கள், ரஸூல்மார்கள் ஆகிய அருட்கொடை வழங்கப்பட்ட அத்தகைய மக்களின் வழியை வேண்டுங்கள் என்று முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டான்.

எவருக்கு அறிவிலிருந்தும், புரியும் திறனிலிருந்தும் கொஞ்சமாவது பங்கு கிடைத்திருக்கிறதோ அத்தகைய ஒவ்வொரு நபருக்கும், இந்த உம்மத் நபிமார்களின் அடிச்சுவட்டில் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதும், இந்த உம்மத்தில் எடுத்துக்காட்டு காணப்படாத எந்தவொரு நபியும் இல்லை என்பதும் தெளிவாகி விடுகிறது. இந்த ஒப்புமையும், ஒத்ததன்மையும் இல்லாவிட்டால் முந்தைய நபிமார்களின் சிறப்பை வேண்டுவது வீணானதாகி விடும். மேலும் துஆ அபத்தமானதாகி விடும்.

எனவே, அல்லாஹ் நம் அனைவருக்கும் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ (இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்' - எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக) என்று கூற வேண்டும் என்றும், தொழுகைகளை தொழும்போது துஆக்களை செய்யும்போது காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் مُنۡعَمۡ عَلَيۡهِمۡ (முன்அம் அலைஹிம் - இறை அருட்கொடை வழங்கப்பெற்றவர்கள்) எனும் கூட்டத்தைத் தேடுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். அதாவது நபிமார்கள், தூதர்களின் பாதையைத் தேடுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். அவன் இந்த உம்மத்தில் சில சாலிஹ் (நல்லவர்)களை நபிமார்களின் அடிச் சுவட்டில் நியமிப்பான். மேலும் அவன் இஸ்ராயீல் மக்களிடம் கலீ∴பாக்களை உருவாக்கியிருந்தது போன்றே, (முஹம்மதிய்ய உம்மத்தைச் சேர்ந்த) அவர்களையும் கலீ∴பாவாக ஆக்குவான் என்பது துவக்கத்திலிருந்தே அவன் நியமித்திருந்தான் என்பதை அவன் சுட்டிக் காட்டியுள்ளான். நிச்சயமாக இதுவே உண்மையாகும். எனவே நீர் வீணான வாதத்தையும், மற்ற வீணான கூற்றுகளையும் விட்டு விடுவீராக. அல்லாஹ் இந்த உம்மத்தில் பல்வேறுபட்ட மேன்மைகளையும், பலவிதமான நல்லொழுக்கங்களையும் ஒன்று சேர்க்க விரும்பினான். எனவே அவன் இந்த துஆவைக் கற்றுக் கொடுப்பதும் பின்னர் தான், விரும்பியதைச் செய்யவும் அவனுடைய பழமையான சுன்னத் (நடைமுறை) எதிர்பார்த்தது. இந்த உம்மத்திற்கு திருக்குர்ஆனில் خَيْرُ الْأُمَمِ (கைருல் உமம் - சமுதாயங்களில் மிகச் சிறந்தது) எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. மேலும் செயல், ஈமான், அறிவு, இறைஞானம் ஆகியவை அதிகமாகும் போதும், இறைவனின் திருப்தியை வேண்டும்போதும் உள்ள அந்த நேரத்தில்தான் இது சிறந்த உம்மத் ஆக முடியும்.

## நேர்வழியைப் பெறுவதற்கான வழிமுறைகள்

ஸூஃபிகளின் பார்வையில் நேர்வழியைப் பெறுவதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றிற்கான சான்று இறைவனின் நெறிநூல், நடைமுறையிலிருந்து நிரூபணமாகின்றது. அவற்றுள் முதல் வழிமுறை, ஆதாரத்துடனும், சான்றுடனும் இறைஞானத்தை வேண்டுவதாகும். இரண்டாவது வழிமுறை, பல்வேறு வணக்க வழிமுறைகளின் பயிற்சியினால் உட்புறத்தை சுத்தப்படுத்துவதாகும். மூன்றாவது வழிமுறை, மற்றெல்லா தொடர்புகளையும் முறித்தவாறு அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துவதும், இறைவன் மீதுள்ள அன்பு களங்கமற்றதாக இருப்பதும் ஆகும். நிறைவான ஒற்றுமை இருப்பது, வேற்றுமை இல்லாமல் இருப்பது, அல்லாஹ்வின் பக்கம் முற்றிலுமாக திரும்புவது, மன்றாடுவது, துஆ செய்வது, உறுதியான தைரியத்தை மேற்கொண்டவாறு படைத்தவனிடம் உதவியை வேண்டுவது ஆகியவை ஆகும்.

அவ்வாறே அவன் நம்பிக்கை கொண்டவர்களிடமும் நற்செயல் செய்கின்றவர்களிடமும், அவன் அவர்களுக்கு முன்னிருந்த நல்லவர்களையும், இறையச்சம் கொண்டவர்-களையும் கலீ∴பாவாக ஆக்கியிருப்பது போன்று, இந்த பூமியில் அவன் தனது அருளாலும், அருட்கொடையாலும் கலீ∴பாவாக ஆக்குவான் என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். எனவே மறுமைநாள் வரை முஸ்லிம்களிடம் கலீ∴பாக்கள் வந்து கொண்டிருப்பார்கள். மேலும் வானத்திலிருந்து ஒருபோதும் எவரும் வர மாட்டார். மாறாக, இந்த உம்மத்தில் இருந்தே தோன்றுவார்கள் என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிகிறது. திருக்குர்ஆனின் கூற்றின் மீது ஈமான் கொள்ளாதிருப்பதற்கு உமக்கு என்ன நேர்ந்து விட்டது? நீர் அல்லாஹ்வின் மறைநூலை விட்டு விட்டீரா? அல்லது உம்மிடம் இறைஞானம் என்பது அணுவளவும் எஞ்சியிருக்க-வில்லையா?

அல்லாஹ் مِنۡكُمۡ (மின்கும் - உங்களிலிருந்து) என்று கூறியிருக்கிறான். مِنۡ بَنِیۡۤ اِسۡرَآءِیۡلَ (மின் பனீ இஸ்ராயீல் - இஸ்ரவேல் சமுதாயத்திலிருந்து) என்று கூறவில்லை. நீர் உண்மையைத் தேடுபவர் என்றால், சான்றைத் தேடுபவர் என்றால், உமக்கு இதுவே போதுமானதாகும். (கோல்டாவைச் சேர்ந்த மஹர் அலி என்ற) ஏழ்மையானவரே! நீர் திருக்குர்ஆனைப் படிப்பீராக. அகங்காரம் கொண்டவர்களைப் போன்று நடக்காதீர். ∴பாத்திஹா சூராவும், (24-ஆவது சூராவாகிய) நூர் சூராவும் அல்லாஹ்வின் முன்னிலையில் உம்மைப் பற்றி முறையீடு செய்யாமல் இருப்பதற்காக நீர் உண்மையின் ஒளியை விட்டு தொலைவில் சென்று விடாதீர். அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக. மீண்டும் அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக. وَعَدَ اللّٰهُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡكُمۡ (வ∴தல்லாஹுல்லதீன ஆமனூ மின்கும் - உங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான்) என்ற அவனது (24:56) கூற்றையும், لَیَسۡتَخۡلِفَنَّهُمۡ (லயஸ்தக்லி∴பன்னஹும் - அவர்களிடம் கண்டிப்பாக கலீ∴பாவை உருவாக்குவான்) என்ற அவனது (24:56) கூற்றையும் நீர் படிக்கும்போது அல்லாஹ்வின் முன்னிலையில் உமக்கு எதிராக இரண்டு சாட்சிகள் நின்று விடாதிருப்பதற்காக சூரா நூர் மற்றும் சூரா ∴பாத்திஹாவின் வசனங்களை கா∴பிர்களில் (மறுப்பவர்களில்) முதன்மையான கா∴பிராக (மறுப்பவராக) நீர் ஆகி விட வேண்டாம்.

(தொடரும்...)

# சொல் ≠ செயல்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் மீதான அச்சமானது, மனிதன் தனது கூற்றும் செயலும் ஒன்று மற்றொன்றோடு ஒத்துப்போகின்றதா என்பதைப் பார்ப்பதில்தான் இருக்கின்றது. அவனது கூற்றும் செயலும் சமமாக இருக்கவில்லை என்றால் பிறகு இறைவனது கோபம் வெளிப்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உள்ளம் தூய்மையற்றதாக இருந்து அவரது கூற்று எவ்வளவு தூய்மையானதாக இருந்தாலும் அந்த உள்ளத்திற்கு இறைவனது பார்வையில் எந்த மதிப்பும் கிடையாது. மாறாக, இறைவனது கோபம் பொங்கி எழும்.

எனவே எனது ஜமாஅத் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் விதையை விதைத்து அதன் மூலம் கனி தரக்கூடிய மரமாக ஆக வேண்டும் என்பதற்காகவே என்னிடம் வந்துள்ளனர். எனவே ஒவ்வொருவரும் தனது அகம் எவ்வாறு இருக்கின்றது? மேலும் தனது புறம் எவ்வாறு இருக்கின்றது என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது ஜமாஅத்தும் இவ்வாறு இருக்குமென்றால் அதாவது அவர்களது உள்ளத்தில் ஒன்றும், நாவில் ஒன்றும் இருக்குமென்றால் பிறகு முடிவு நல்லதாக இருக்காது.

ஒரு ஜமாஅத் உள்ளத்தால் காலியாகவும், மேலும் நாவளவிலான வாதங்களை செய்வதையும் இறைவன் பார்க்கின்றபோது அவன் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். அவன் யாரையும் பொருட்படுத்துவதில்லை. பத்ர் போரில் வெற்றிக்கான முன்னறிவிப்பு வழங்கப்பட்டிருந்தும், ஒவ்வொரு புறமும் வெற்றிக்கான நம்பிக்கையே இருந்த போதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுதழுது துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், வெற்றிக்கான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. பிறகு என்ன அவசியம் வந்து விட்டது? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவனது இருப்பு தன்னிறைவு பெற்றதாகும். அவனது வாக்குறுதியில் ஏதாவதொரு மறைமுகமான நிபந்தனைகள் இருக்கலாம் என்று கூறினார்கள்.

(மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 5-8)

12

# பராஹீனே அஹ்மதிய்யா

பாகம் 2
தொகுதி 1

ஆங்கிலப் பதிப்பிலிருந்து தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார் ஆஸ்டின்

கண்ணியத்திற்குரியவர்களே! நிச்சயஉறுதியுடன் நான் அறிந்து கொண்டுள்ள விஷயமாவது, பேரின்பத்தை தேடும் ஒருவர் எந்த போதனைகளின் மீது முழுமையான விசுவாசத்தை வைக்க வேண்டுமோ, மனிதகுலத்தின் ஈடேற்றம் மற்றும் நித்திய ஆனந்தம் எந்த போதனைகளை சார்ந்து இருக்குமோ, அத்தகைய போதனைகளை திருக்குர்ஆனில் மட்டுமே காண இயலும் என்பதே. நான் செய்த முயற்சியின் அளவு வேறு எவரேனும் செய்யும் பட்சத்தில் அவரும் இதை உணர்ந்து கொள்ள இயலும். பிற அனைத்து வேதங்களும் எந்த அளவிற்கு பாழ்பட்டுப் போய் விட்டது என்றால், அவைகளில், இட்டுகட்டப்பட்டுள்ள செயற்கையான நம்பிக்கைகள் நிறைந்து உள்ளன.

மேலும் ஞானம் மிக்க நேரான பாதயில் இருந்தும் இயல்பான வழிமுறைகளில் இருந்தும் விலகி, அவற்றை சுட்டிக்காட்டி நான் கூறுவதற்கே வெட்கப்படும் அளவிற்கு அவை பாழ்பட்டு விட்டன. மேலும் எனது இந்த கூற்றை சரியான திட்டவட்டமான உண்மையான ஆதாரங்களின் அடிப்படையிலன்றி நான் கூறவில்லை. இந்நூலை நான் எழுதுவதற்கு முன்பு மிக ஆழமான ஆராய்ச்சியை மேற்கொண்டேன் என்று உண்மையாகவே கூறுகிறேன்.

எல்லா மதங்களின் வேதங்களையும் ஒரு நியாயமான உணர்வுடனும் உண்மையுடனும் படித்து சரியான யோசனையுடனும் ஆலோசனைகளுடனும் ஆராய்ந்து அந்த வேதங்களின் போதனைகளைத் திருக்குர்ஆனின் போதனை-களுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். பிற மதத்தின் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள பண்டிதர்களுடன் பல ஆலோசனை-களையும் மேற்கொண்டேன்.

ஒரு மனிதனால். எந்த அளவு முடியுமோ அந்த அளவிற்கு பாடுபட்டு உண்மைகளை அறிந்து கொள்ள அனைத்து வழிகளையும் ஆராய்ந்து அறிந்தேன். இறுதியான எனது முடிவு. யாதெனில், “உலகத்தில் இன்று உள்ள அனைத்து வேதங்களையும் எடுத்துக் கொண்டால், இறைவன் புறத்திலிருந்து அருளப்பட்டது என்று மறுக்க முடியாத வாதங்களின் அடிப்படையில் நிலைநாட்டப் படக்கூடியது திருக்குர்ஆன் மட்டுமே ஆகும்.”

திருக்குர்ஆன் மட்டுமே ஈடேற்றம் தொடர்பான தனது கொள்கைகளை உண்மை மற்றும் மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டதாக அமைத்-துள்ளது. அதன் கோட்பாடுகள் விரிவானவை-யாகவும், உண்மையில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டவையாகவும், வலிமை-யான வாதங்களால் உறுதிப்படுத்தப்-பட்டவையாகவும் உள்ளன. அதன் கட்டளைகள் யாவும் உண்மையின் கட்டளைகளே. அதன் போதனைகளில் சிலை வழிபாடு, மனிதனால் உருவாக்கப்-பட்ட மார்க்கப் புதுமைகள், பொய்த் தெய்வங்கள் ஆகியவற்றின் களங்கம் எதுவும் இல்லை.

திருக்குர்ஆனின் போதனைகள் இறைவனின் ஏகத்துவத்தையும், மகத்துவத்தையும், பரிபூரண மேன்மையை-யும் மிகுந்த வலியுறுத்தலுடன் எடுத்துரைக்கின்றன. மேலும் மகிமைமிக்க இறைவனின் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் அவை முழுமையாக நிரம்பியுள்ளன.

இறைவனின் ஏகத்துவத்திற்கு முரணான எதையும் திருக்குர்ஆன் இறைவன் மீது சாட்டுவதில்லை. அதுபோல, எந்தக் களங்கத்தையோ, குறைபாட்டையோ அல்லது இறைவனுக்கு பொருந்தாத எந்தப் பண்பையோ அவனுக்கு உரித்தாக்குவதில்லை.

நம்மீது எந்தப் போதனையையும் வழங்குவதற்குமுன், அதற்கு ஆதரவான போதுமான ஆதாரத்தை முதலில் வழங்குகிறது. மேலும் தனது ஒவ்வொரு கோட்பாட்டையும் சான்றுகளுடனும் தெளிவான வாதங்களுடனும் விளக்குகிறது. இவ்வாறு, அது தன்னைப் பின்பற்றுபவர்களை முழுமையான நிச்சயத்திற்கும் தெளிவான புரிதலுக்கும் வழிநடத்துகிறது.

காலப்போக்கில் மக்களின் நம்பிக்கைகள், செயல்கள், கூற்றுகள், மற்றும் செயல்களில் கலந்துள்ள தீர்வுகள், அசுத்தங்கள், பழுதுகள் மற்றும் சிதைவுகள் ஆகியவற்றை தெளிவான மற்றும் மறுக்க இயலாத வாதங்களை கொண்டு விலக்கி கண்ணியமான நேர்மையான நிலைகளை எந்த ஒரு விஷயங்களைப் பற்றி அறிவு ஒரு மனிதனை உண்மையான மனிதனாக மாற்றுமோ அந்த அறிவையும் கற்றுக் கொடுக்கின்றது.

பரவலாக இருக்கின்ற அனைத்து தீமைகளையும் இப்போதனைகள் சம வீரியத்துடன் எதிர்த்து நிற்கின்றது. மேலும் இப்போது நிலை நேரானவை சரியான அடிப்படைகளைக் கொண்டவை மற்றும் குறைகள் அற்றவை

எந்த அளவிற்கு எனில் அவை இயற்கைச் சட்டத்தின் பிரதிபலிப்பு சம மனித மனசாட்சியில் பிரதிபலிப்பாகவும் உள்ளன. இயல்பாக பகுத்தறிவில் காணப்படக்கூடிய குறைபாட்டைக் களைவதுடன் மனித உள்ளம் மற்றும் இதயத்திற்கு ஒளி வீசும் சூரியனாகவும் உள்ளது.

இறைவேதங்கள் என்று அழைக்கப்படக்கூடிய பிற வேதங்களின் தற்போதைய நிலைமையை நான் காணும் பொழுது அவை அனைத்து நூல்களுமே திருக்குர்ஆனில் காணக்கூடிய நேர்த்தியான தன்மைகளை இழந்தே உள்ளன என்று எனக்கு தெளிவாக தெரிந்தது. இறைவனது தனித்துவ இருப்பு மற்றும் அவனது பண்புகளுக்கு தவறான அர்த்தங்களைத் தருவதுடன் அவற்றைப் பின்பற்றுபவர்கள் விசித்திரமான சந்தேகத்திற்கு ஏதுவான கொள்கைகளைச் சார்ந்து உள்ளனர். அவர்களுள் சிலர் இறைவனின் படைப்பாற்றலையும் படைக்கப்பட்ட அனைத்தின் மீதும் இறைவனுக்கு இருக்கும் ஆற்றலையும் மறுத்து தங்களையே இறைவனுக்கு இணையாகவும் நித்திய பங்காளியாகவும் சமமாக தோன்றி இருப்பவர்களாகவும் நம்புகின்ற போது மற்றும் சிலர் சிலைகள், சிறு தெய்வங்கள், பெண் தெய்வங்கள் போன்றவற்றை இறைவனுக்கு இணை ஆக்கி இறைஆட்சியில் அவனுக்கு இணையாக அதிகாரம் அவைகளுக்கும் உள்ளது என கருதுகின்றனர் .

சிலர் இறைவனுக்கு மகன்கள், மகள்கள், பேரர்கள், பேத்திகள் கற்பனையாக உருவாக்கும்போது மற்றும் சிலர் அந்த இறைவனே முதலையாகவோ ஆமையாகவோ பிறவி எடுத்துள்ளான் என்று நம்புகின்றனர்.

அதாவது இறைவனின் நேர்த்தியான உன்னதமான தன்மையை, பகுத்தறிவினால் அறியக்கூடிய அளவில் இயல்பாகவே இறைவனுக்கு இருக்கக்கூடிய நேர்த்தியான உன்னத நிலையை, இறைவனிடம் இல்லாத அளவில் இழிவாக காட்ட முற்படுவதில் அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிடுகின்றனர்.

அன்பான சகோதரர்களே! சுருங்கக் கூறின் இத்தகு தவறான நம்பிக்கைகளில் மூழ்கி இருளிலே தங்களை தொலைத்துவிட்ட மக்களை நான் காணும் பொழுது என் இதயம் நடுங்குகின்றது. நான் முழுமையாக அடித்தளத்தில் இருந்து ஆடிப்போய் ஒரு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு இந்த நூலை எழுதும் பணியை ஏற்றுக் கொண்டுள்ளேன். எப்பாடுபட்டேனும் நிறைவேற்றியே தீர வேண்டிய அளவிற்கான என் மீதுள்ள ஒரு கடமையாகவே இருக்கின்றது. எனவே, இறைவனின் அருளைக் கொண்டு, நூலின் கையெழுத்து பிரதி சராசரியை விட மிகக் குறைந்த கால அளவிலேயே எழுதி முடிக்கப்பட்டுள்ளது.

உண்மை யாதெனில் இந்நூலானது உண்மையைத் தேடுபவர்களுக்கு ஒரு நற்செய்தியாகவே இருக்கின்றது இஸ்லாம் மார்க்கத்தை மறுப்பவர்களுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள முடிவான மறுக்க முடியாத தெய்வீகமான, உலகில் இறுதி நாள் வரை அவர்களால் மறுக்க இயலாத வாதங்கள் ஆகும்.

இக்காரணத்தினாலேயே, இஸ்லாத்தின் உண்மையை எதிர்த்து மறுப்போர் அனைவருக்கும் எதிரான வாதத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, அவர்கள் தங்களுடைய தவறான நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருக்க எந்தச் சாக்குப்போக்கும் இல்லாதபடி, ரூபாய் 10,000 பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் சேர்த்துள்ளேன்.

(தொடரும்...)



# 1974-ல் பாக்கிஸ்தான் தேசிய அவை (National Assembly) நிகழ்வுகளின் சில நினைவலைகள்

A. நாஸிர் அஹ்மத்

## பின்னணி:

இறையியக்கங்களின் எதிர்ப்பாளர்கள் கொள்கை அரங்கில் தோல்வியைத் தழுவும்போது கொடுமை இழைப்பதன் பக்கமும் வன்முறையின் பக்கமும் திரும்புவர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இதற்கு விதிவிலக்கல்ல. 1974 ஆம் ஆண்டில், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிரான ஒரு புதிய அலை பாகிஸ்தான் முழுவதும் பரவியது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடுவது குறித்த திட்டங்களை அறிவித்தது, பாகிஸ்தானில் இருந்த சில தீவிரப் போக்குடைய ஆலிம்களிடையே கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியது.

ரப்வா இரயில் நிலையத்தில் ஒரு சம்பவம் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது கடுமையான எதிர்ப்பைக் கொண்டிருந்த ஓர் அமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் பயணம் செய்த இரயில் ரப்வா இரயில் நிலையத்தை வந்தடைந்தபோது, அங்கு இருந்த சில அஹ்மதிகளைத் தூண்டி, மாணவர்களுடன் மோதல் ஏற்படும் வகையில் அந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டது. அந்த மோதலில் மாணவர் குழுவைச் சேர்ந்த சிலருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டன.

மறுநாள் காலை பத்திரிகைகளில் சம்பவம் பற்றிய முற்றிலும் பொய்யானதும் தவறாக வழிநடத்தக் கூடியதுமான செய்திகள் வெளியிடப்பட்டன. அவற்றில், மாணவர்கள் அஹ்மதிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டதாகவும், பொய்யான, கற்பனையான மற்றும் பயங்கரமான விவரங்களும் சேர்க்கப்பட்டிருந்தன.

இதனால் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலை ஏற்பட்டது. பின்னர், ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எதிராக முன்கூட்டியே திட்டமிடப்பட்டு பல்வேறு கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ரப்வா சம்பவத்தைத் தொடர்ந்து பரவலாக ஏற்பட்ட குழப்பங்களின்போது, பல அஹ்மதிகள் ஷஹீதாக்கப்பட்டனர். பலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர், அஹ்மதிகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் பெருமளவில் கொள்ளை அடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இந்தக் கடுமையான துன்பங்களின் மத்தியிலும், அஹ்மதிய்யா ஜமாஅத் முழுமையான உறுதியையும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையையும் வெளிப்படுத்தியது.

சில இடங்களில் ஜமாஅத்திற்கு எதிராகப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட அஹ்மதி குடும்பங்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகினர். குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ஆனால், பொதுவாகப் பார்க்கும்போது, இந்தச் சோதனையிலிருந்து ஜமாஅத் முந்தைய காலத்தை விட மேலும் வலிமையானதாகவும், அதிக ஒற்றுமையுடனும், அதிக உற்சாகத்துடனும் வெளி வந்தது.

இதற்குப் பின்னர், அஹ்மதிய்யா ஜமாஅத்தை சட்டமன்ற நடவடிக்கையின் மூலம் இஸ்லாத்தின் வரம்பிற்கு வெளியே உள்ளதாக அறிவிக்க வேண்டும் என்று அதன் எதிர்ப்பாளர்கள் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர்.

அவர்கள் பிரதமரை சம்மதிக்கச் செய்து, அந்த நோக்கத்தை நிறைவேற்ற தேசிய அவையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கச் செய்தனர்.

## ஒரு நாட்டின் நாடாளுமன்றமே சிறப்புக் குழுவாக மாறியது:

1974 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மார்க்க அந்தஸ்து தொடர்பான ஒரு பிரேரணை தேசிய அவையில் முன்வைக்கப்பட்டது. பின்னர் தேசிய அவையின் முழு அவையும் சிறப்புக் குழு (Special Committee) ஆக மாற்றப்பட்டு, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க முடிவு செய்யப்பட்டது.

அதிகாரப்பூர்வ தேசிய அவைப் பதிவின்படி, 30 ஜூன் 1974 முதல் இந்த சிறப்புக் குழு இரண்டு மாதங்களாக பல அமர்வுகளை நடத்தியது. அவை அனைத்தும் மூடிய அறை அமர்வுகளாக (In Camera) நடைபெற்றன. இதன் மூலம், ஒரு மார்க்க அமைப்பின் மார்க்க அந்தஸ்து தொடர்பான விவகாரம் பாகிஸ்தானின் நாடாளுமன்றத்தின் முன் நேரடியாகக் கொண்டு வரப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலைப்பாட்டை நேரடியாகக் கேட்பதற்காக தேசிய சபையின் முழு சபையும் பல்வேறு பிரிவைச் சேர்ந்த ஆலிம்களும் அந்த சிறப்புக் குழுவில் நியமிக்கப்பட்டிருந்தனர்..

ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹ்) அவர்கள் நேரடியாக ஆஜராக வேண்டும் என்று அரசாங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அன்னாருடன் நான்கு பேரைத் தாமே தேர்ந்தெடுத்து அழைத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹ்), மௌலானா அபுல் அதா ஜலந்தரி, ஷேக் முஹம்மது அஹ்மத் மஜ்கர் மற்றும் மௌலானா

தோஸ்த் முஹம்மது ஷாஹித் ஆகியோர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர்.

## மஹ்ஸர் நாமா:




அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிலைப்பாட்டை விரிவாக விளக்கும் ஆவணம் "மஹ்ஸர் நாமா (Mahzar Namah) - The Memorandum" என்ற வடிவில் தயாரிக்கப்பட்டு, ஒரு வரலாற்று ஆவணமாக தேசிய அவையின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் எழுப்பப்பட்ட பல்வேறு கேள்விகளையும் குற்றச்சாட்டுகளையும் ஒருங்கிணைத்து, அவற்றுக்கு ஜமாஅத்தின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் அந்த ஆவணம் அமைந்திருந்தது.

இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், பாகிஸ்தான் தேசிய அவையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பதினொரு நாட்கள் கடுமையான கேள்வி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. பாகிஸ்தானின் அட்டர்னி ஜெனரலும் மதகுருமார்களும் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் தாமே தனிப்பட்ட முறையில் முன்வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளித்ததோடு, அவற்றை வலுவான, பகுத்தறிவான மற்றும் தீர்க்கமான முறையில் மறுத்தார்கள்.

ஒருவர் "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று கலிமா கூறினால், அவர் முஸ்லிம் அல்ல என்று தீர்மானிக்கும் அதிகாரம் எந்த ஒரு நாடாளுமன்றத்திற்கும் இல்லை. மனிதனின் உண்மையான நிலை மற்றும் அவனுடைய உள்ளத்தின் நிலை பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. ஒரு மனிதனின் மனச்சாட்சியைத் தீர்மானிக்கும் அதிகாரம் எந்த ஒரு நாடாளுமன்றத்திற்கும் கிடையாது. அவ்வாறு ஒரு தீர்ப்பை வழங்குவதற்கும் அதற்கு அதிகாரம் இல்லை. இது குறித்து மஹ்ஸர் நாமாவில் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

## 11 நாட்கள் - கேள்விகளின் மழை

இந்த விவகாரத்தை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணி என்னவென்றால், "ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை இறுதி நபி என்று ஏற்றுக் கொள்ளாத ஒருவரின் இஸ்லாமிய நிலை என்ன?" என்பதைக் குறித்து ஆராய்வதாகும்.

எனவே, அடிப்படையில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் கத்மே நுபுவ்வத் பற்றிய நம்பிக்கை என்ன என்பதையும், மஸீஹ் மவ்வூத் (அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) அவர்கள் கூறிய நபித்துவக் கூற்றின் உண்மைதன்மை என்ன என்பதையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அவர்கள் புதிய ஷரீஅத்தை கொண்டு வந்தார்களா? அல்லது ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்திலும் கீழ்ப்படிதலிலும் இருந்து, இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அனுப்பப்பட்டதாக அவர்கள் கூறினார்களா?

ஆனால், விசாரணை தொடங்கியபோது ஆச்சரியப்படத்தக்க வகையில், உண்மையான விஷயத்தைப் பற்றி நேரடியாக மிகவும் குறைவாகவே பேசப்பட்டது. சில நேரங்களில் பேசவே இல்லை என்று கூட கூறலாம்.

ஆரம்பத்திலிருந்தே கேள்விகளின் திசை, உண்மையான பிரச்சினையுடன் எந்தத் தொடர்பும் இல்லாத விஷயங்களை நோக்கித் திருப்பப்பட்டது. உதாரணமாக,

- *மிர்ஸா சாஹிப் எப்போது பிறந்தார்?*
- *எங்கே பிறந்தார்?*
- *அவருடைய குடும்பப் பின்னணி என்ன?*
- *அவருடைய கல்வி என்ன?*
- *அவர்கள் எப்போது மரணமடைந்தார்கள்?*
- *நீங்கள் 'மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்' என்று அழைக்கப்படுகிறீர்கள்? உங்களுடைய தனிப்பட்ட விவரங்கள் என்ன?*
- *மிர்ஸா சாஹிப் அவர்களுடன் உங்களுடைய குடும்பத் தொடர்பு என்ன?*
- *நீங்கள் 'அமீருல் முஃமினீன்' என்றும் அழைக்கப்படுகிறீர்கள்.*
- *'இமாம் ஜமாஅத் அஹ்மதிய்யா' என்றும் அழைக்கப்படுகிறீர்கள்.*

இவ்வாறாகப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால் இவற்றில் பெரும்பாலான விஷயங்களுக்கும் உண்மையான விவகாரத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை.

இருந்தபோதிலும், ஹுஸூர் அவர்கள் அந்த எல்லா கேள்விகளுக்கும் மிகுந்த நிதானத்துடனும், அமைதியுடனும், மிகுந்த தைரியத்துடனும் பதிலளித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தொடர் விசாரணைகள் நடந்து கொண்டே இருந்தன. ஆரம்பத்தில் இவை வெறும் முன்னோட்டக் கேள்விகளாக இருக்கலாம் என்றும், பின்னர் உண்மையான விவகாரமான கத்மே நுபுவ்வத் குறித்து அவர்கள் கேள்விகளை எழுப்புவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஏனெனில் முழு விவாதத்தின் அடித்தளமாக இருந்த விஷயம் அதுதானே?

ஆனால் அதன் பின்னர் கேள்விகள் அஹ்மதிகளின் எண்ணிக்கையை நோக்கித் திரும்பின.

- "1921 ஆம் ஆண்டு ஜமாஅத்தின் எண்ணிக்கை எவ்வளவு?"
- "1936 ஆம் ஆண்டு எண்ணிக்கை எவ்வளவு?"
- "இப்போது பாகிஸ்தானில் எத்தனை அஹ்மதிகள் உள்ளனர்?"

- "மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் எத்தனை பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்?"
- "மிர்ஸா சாஹிப் தமது நூல்களில் எத்தனை எண்ணிக்கையை குறிப்பிட்டிருக்கிறார்?"

இவ்வாறாக மீண்டும் மீண்டும் உண்மையான விவகாரத்துடன் தொடர்பில்லாத விஷயங்களே கேட்கப்பட்டன. அரசாங்கத்தின் அட்டர்னியும் பல்வேறு மார்க்க அறிஞர்களும் கேள்விகளை எழுப்பினர். அஹ்மதிய்யா தரப்பின் சார்பில் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹ்) அவர்கள் நேரடியாகப் பதிலளித்தார்கள்.

## கேள்விகளும் ஹுஸூர் அவர்களின் பதில்களும்

அட்டர்னி: ஒரு முஸ்லிம் மாணவன், சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் ஒரு மருத்துவக் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் சேர்வதற்காக தன்னை ஒரு இந்துவாகக் குறிப்பிட்டு விண்ணப்பித்தால், அது தவறல்லவா?

ஹுஸூர் அவர்கள்: நாங்கள் சுமார் 90 ஆண்டுகளாக நம்மை முஸ்லிம்கள் என்று கூறி வருகிறோம். நாங்கள் யாரையும் ஏமாற்றவில்லை. அந்த மாணவன்தான் ஏமாற்றுகிறான். அவன் தனது உண்மையான அடையாளத்தை மறைக்கிறான். நாங்கள் எங்களுடைய அடையாளத்தை மறைக்கவில்லை.

பின்னர் ஒரு கட்டத்தில் அட்டார்னி ஜெனரல் ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு வந்தார். அதாவது, மத விவகாரங்களில் அரசாங்கத்திற்குத் தலையிடும் உரிமை உள்ளது என்ற கருத்தை முன்வைத்து, அதை நிரூபிப்பதற்காக பல்வேறு கற்பனையான உதாரணங்களை முன்வைக்கத் தொடங்கினார். உதாரணமாக,

அட்டர்னி: ஒருவர், 'நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நம்பவில்லை. ஆனால் நான் முஸ்லிம்' என்று கூறினால், நீங்கள் அவரை முஸ்லிம் என்று ஏற்றுக் கொள்வீர்களா?

ஹுஸூர் அவர்கள்: மிகுந்த நிதானத்துடனும், அமைதியுடனும், மிகுந்த அறிவாற்றல் மற்றும் இறைஞானத்துடனும் பதிலளித்தார்கள். அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட கலீஃபாக்களுக்கு வழங்கப்படும் அந்த விசேஷமான அறிவாற்றலுடன், இந்த எல்லா மிகைப்படுத்தப்பட்ட மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட உதாரணங்களையும் ஹுஸூர் அவர்கள் உண்மையான விவகாரத்திலிருந்து தனித்தனியாகப் பிரித்துக் காட்டினார்கள்.

ஹுஸூர் அவர்கள்: இது ஜமாஅத் அஹ்மதிய்யாவின் நிலை அல்ல. ஜமாஅத் கலிமாவை ஓதுகிறது. திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்கிறது. ரஸூலுல்லாஹ் அவர்களை 'காத்தமுன் நபிய்யீன்' என்று ஏற்றுக் கொள்கிறது. மேலும் எப்போதும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் ஒரு ஜமாஅத்தாகவே தன்னை முன்வைக்கிறது.

பல்வேறு விசித்திரமான உதாரணங்கள் முன் வைக்கப்பட்டன.

அட்டர்னி: ஒரு யூதர் உளவு பார்க்கும் நோக்கத்துடன் தன்னை முஸ்லிம் என்று பதிவு செய்து மக்கா அல்லது மதீனாவிற்குள் நுழைந்தால், அவரைக் கைது செய்வீர்களா இல்லையா? என்று கேட்கப்பட்டது.

அதற்கு ஹுஸூர் அவர்கள் மிகவும் அழகான பதிலை வழங்கினார்கள்.

ஹுஸூர் அவர்கள்: அவர் தன்னை முஸ்லிம் என்று வெளிப்படுத்தியதற்காகக் கைது செய்யப்படமாட்டார். மாறாக, அவர் மீது சுமத்தப்படும் உளவு பார்த்த குற்றச்சாட்டின் காரணமாக கைது செய்யப்படுவார். அல்லது அவர் தன்னைத் தவறான முறையில் முஸ்லிம் என்று வெளிப்படுத்தியதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.



பின்னர் அவர்கள் உதாரணத்தை மாற்றினர்.

அட்டர்னி: சரி, ஒரு கிறிஸ்துவர் செய்தியாளராக இருந்து, தவறான அறிவிப்பைச் செய்து தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொண்டு வந்தால், அவரைத் தடுக்கமாட்டீர்களா?

ஹுஸூர் அவர்கள்: தவறான அறிவிப்பைச் செய்ததற்காக அவர் தடுக்கப்படுவார்.

இதிலிருந்து ஹுஸூர் அவர்களின் ஆழ்ந்த பார்வை தெளிவாகத் தெரிகிறது.

அவர்கள் தங்களுடைய பக்கத்திலிருந்து உருவாக்கிக் கொண்டு வந்த ஒவ்வொரு சிக்கலான உதாரணத்தையும் தனித்தனியாகப் பிரித்து, மிகுந்த அமைதியுடன் தெளிவான அம்சங்களுக்குள் கொண்டு வந்து விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு, லக்ஸ் சோப்பின் உதாரணத்தை கூறினார்கள்.

அட்டர்னி: லக்ஸ் என்ற பெயரில் ஒரு சோப்பை ஒரு நிறுவனம் தயாரிக்கிறது. அதே பெயரில் வேறு ஒரு நிறுவனம்

சோப்பைத் தயாரித்தால், அரசாங்கம் அதைத் தடுக்க முடியுமா? என்று கேட்கப்பட்டது.

ஹுஃஸூர் அவர்கள்: “அங்கு காப்புரிமை மற்றும் தனியுரிமை (Monopoly) தொடர்பான பிரச்சினை உள்ளது. ஒரு நிறுவனத்திற்கு ஒரு பொருளின் மீது காப்புரிமை இருந்தால் அது வேறு விஷயம்.” ஆனால் மதம் என்பது வணிகப் பொருள் அல்ல. யாரோ ஒருவர் அதைத் தனது பெயரில் காப்புரிமை பெற்றுக் கொண்டது போன்ற விஷயமும் அல்ல. “இவ்வாறு ஒருவர் கூறினால், கிறிஸ்தவர்களின் ஒரு பிரிவு, ‘கிறிஸ்தவ மதத்தை நாங்கள்தான் காப்புரிமை பெற்றுள்ளோம் எனவே வேறு எந்தப் பிரிவும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைக்க முடியாது’ என்று கூறினால், அதை ஏற்றுக்கொள்வோமா?”.

இவ்வாறாக, உண்மையான விவகாரத்துடன் தொடர்பில்லாத பல்வேறு விஷயங்கள் முன்வைக்கப்பட்டன. “அஹ்மதிகள் ஜனாஸா தொழுகையை நடத்துவதில்லை. மற்ற முஸ்லிம்களின் பின்னாலும் தொழுவதில்லை.”

இவ்வாறான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

ஹுஃஸூர் அவர்கள், மற்ற முஸ்லிம் பிரிவுகள் ஒருவருக்கொருவர் வழங்கியுள்ள ஃபத்வாக்களைப் பாருங்கள் என்று கூறி, அவற்றில் சிலவற்றை வாசித்துக் காட்டினார்கள்.

“நீங்கள் ஒருவரை ஒருவர் எந்த அளவுக்கு கா∴பிர், முர்தத் மற்றும் பலவாறாக அறிவித்துக் கொண்டிருக்கிறீர் -கள்! அப்படியானால், இவர்களில் யாருடைய பின்னால் நாங்கள் தொழ வேண்டும்?” என்ற கருத்தை ஹுஃஸூர் அவர்கள் முன்வைத்தார்கள்.

## கற்பனை மேற்கோள்கள்:

இதுதொடர்பாக ஒரு பட்டியலே உள்ளது. மிகவும் விசித்திரமான மேற்கோள்களைக் கூட அவர்கள் முன்வைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் அட்டர்னி ஜெனரல் சாஹிப், “மிர்ஸா சாஹிப், மஸீஹ் மௌஊத் (அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) அவர்களின் ‘ஆயினா சதாக்கத்’ என்ற நூல் உள்ளது” என்று கூறினார்.

ஹுஃஸூர் அவர்கள் உடனடியாகத் தடுத்து, “மஸீஹ் மௌஊத் (அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) அவர்களின் எந்த நூலின் பெயரும் ‘ஆயினா சதாக்கத்’ அல்ல” என்று கூறினார்கள்.

பின்னர் மற்றொரு நூலின் பெயர் குறிப்பிடப்பட்டது.

“சரி, இன்னொரு நூல் இருக்கிறது..." என்று கூறி, ‘நஜ்முல்லாஹ்’ போன்ற ஒரு பெயரைக் குறிப்பிட்டு அதிலிருந்து மேற்கோள் காட்ட முயன்றார்கள்.

ஹுஃஸூர் அவர்கள், ‘இது யாருடைய நூல்?’ என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் கூறிய பெயர், “இந்த நூலின் ஆசிரியர் யார் என்பது எங்களுக்கே தெரியவில்லை” என்ற நிலைக்கு வந்தது.

அப்போது ஹுஃஸூர் அவர்கள், “அப்படியானால், எங்களுக்கு எதிராக இதை ஏன் முன்வைக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம்) அவர்களின் ஒரு நூலான துஹ்∴பா கோல்டவியாவிலிருந்து ஒரு மேற்கோள் முன்வைக்கப்பட்டது.

அதில் ஒரு குறிப்பிட்ட பக்க எண்ணும் கூறப்பட்டது.

ஹுஃஸூர் அவர்கள் அந்தப் பக்கத்தைத் திறந்து பார்த்தபோது, “நீங்கள் கூறிய அந்தப் பக்க எண்ணிக்கையே இந்த நூலில் இல்லை” என்று தெரிவித்தார்கள்.

பின்னர் ஹகீகத்துல் வஹீ என்ற நூலிலிருந்து ஒரு வாசகம் வாசிக்கப்பட்டது. ஆனால் அது ஹகீகத்துல் வஹீ நூலில் காணப்படவில்லை.

அதன் பிறகு அல் ∴பஸ்ல் பத்திரிகையிலிருந்து ஒரு மேற்கோள் முன்வைக்கப்பட்டது.

அதில் ஒரு குறிப்பிட்ட தேதி கூறப்பட்டது.

ஹுஃஸூர் அவர்கள் அடுத்த நாள் அதைச் சரிபார்த்து, “நீங்கள் கூறிய அந்தத் தேதியில் ‘அல்-∴பஸ்ல்’ பத்திரிகையே வெளியாகவில்லை” என்று தெரிவித்தார்கள்.

அவர்கள், “அது வேறு ஒரு நாளில் வெளியாகி இருக்கலாம்” என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஃஸூர் அவர்கள்,

“அது எங்களுடைய பொறுப்பு அல்ல. நீங்களே தேடிப் பாருங்கள். நீங்கள் ஜமாஅத்துக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைக்கிறீர்கள் என்றால், குறைந்தபட்சம் அந்தக் குற்றச்சாட்டுக்கான சரியான ஆதாரத்தையாவது வழங்க வேண்டும்” என்று கூறினார்கள்.

ஒரு நாள் ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து ஒரு மேற்கோள் முன்வைக்கப்பட்டது.

“இம்பாக்ட் என்ற பெயரில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை உள்ளது. அதில் இது எழுதப்பட்டுள்ளது” என்று கூறினார்கள்.

ஹுஃஸூர் அவர்கள் கேட்டார்கள்:

“இந்தக் கட்டுரையை எழுதியவர் யார்?”

“தெரியவில்லை.”

“இந்தப் பதிப்பின் முக்கியத்துவம் அல்லது நிலை என்ன?”

“அதன் முக்கியத்துவம் எங்களுக்குத் தெரியவில்லை.”

அப்போது ஹுஃஸூர் அவர்கள், “இந்த எழுத்துடன் எங்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது என்பது கூட உங்களுக்குத் தெரியவில்லை. அப்படியானால், இதை எங்களுக்கு எதிரான ஆதாரமாக ஏன் முன்வைக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள்.

இவ்வகையான எண்ணற்ற விஷயங்கள் இருந்தன. ஆனால் அவற்றில் உண்மையான விவகாரம் இல்லை.

## அசாதாரண காட்சிகளும் தருணங்களும்

இந்த பதினொரு நாட்கள் தொடர்பான மிக சுவாரஸ்யமான தகவல்களை அவர்களின் ஆலிம்களே கூறியுள்ளனர். மூன்றாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹ்) அவர்களின் தோற்றமும் ஆளுமையும் ஏற்படுத்திய மதிப்பச்சம் தேசிய அவையின் பல உறுப்பினர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனை பல ஆலிம்களும் மற்றவர்களும் உறுதி செய்துள்ளனர். உதாரணமாக, தேசிய அவையின் சிறப்புக் குழுவின் தலைவராக செயல்பட்ட மு.ஃப்தி மஹ்மூத் தேசிய அவையில் நடந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்தவாறு கூறுகிறார்:

“மிர்ஸா நாஸிர் அஹ்மத் அவர்கள் சுமார் 200 பக்கங்களைக் கொண்ட ஒரு மஹ்ஸர் நாமாவை (Memorandum) தயாரித்து வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் நாடாளுமன்றத்திற்குள் வந்து, தங்களுடைய முழுமையான அறிக்கையையும் வாசித்தார்கள். அதில் அவர்களுடைய முழுமையான நிலைப்பாடும் கருத்துகளும் அடங்கியிருந்தன. நாங்கள் அந்த அறிக்கையை மிகவும் கவனமாகக் கேட்டோம். அதன் பின்னர் நாங்கள் ஓரளவு கவலை அடைந்தோம் என்பது உண்மை. மிர்ஸா நாஸிர் அஹ்மத் அவர்களின் உரையைக் கேட்டதன் மூலம், அவையின் உறுப்பினர்கள் ஓரளவுக்கு அவரால் ஈர்க்கப்பட்டிருந்தனர்.

அவர் வெள்ளைத் தாடியுடனும், வெள்ளைத் தலைப்பாகையுடனும், கமீஸ் மற்றும் சல்வார் அணிந்தவராகவும் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார். அந்தத் தோற்றத்துடனும் கண்ணியமான நடத்தையுடனும் அவர் அவைக் கூடத்திற்கு வந்தார். நான் உட்பட அவையின் பல உறுப்பினர்கள் அவரை அதற்கு முன்பு பார்த்ததில்லை. அவையின் சில உறுப்பினர்கள் எங்களிடம், “நீங்கள் இவரையா கா.ஃபிர் என்று அறிவிக்கிறீர்கள்? இவருடைய முகத்தைப் பார்த்தால் இவர் ஒரு கா.ஃபிரைப் போலத் தோன்றுகிறாரா?” என்று கூறினார்கள்.

அவர் (மிர்ஸா நாஸிர் அஹ்மத்) தமது உரையின்போது புனித நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பெயரைக் குறிப்பிடும்போது, அவர்கள் மீது தரூத் ஓதியபோது, அவை உறுப்பினர்கள் எங்களிடம் திரும்பி, “இவர் புனித நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தை ஓதுகிறார். ஆனால் நீங்கள் இவர் ஒரு முஸ்லிம் அல்ல என்று கூறுகிறீர்கள்” என்று கூறுவார்கள். அதே போன்று, சில சந்தர்ப்பங்களில் அவர் புனித குர்ஆனின் வசனங்களை ஓதினார். அப்போது அவை உறுப்பினர்கள் எங்களிடம் திரும்பி, “இவர் புனித குர்ஆனின் வசனங்களை ஓதுகிறார். ஆனால் நீங்கள் இவர் ஒரு முஸ்லிம் அல்ல என்று கூறுகிறீர்கள்” என்று கூறுவார்கள்.

நாங்கள் கவலை அடைந்திருந்தோம். ஏனெனில், அதுதான் எங்களுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாக இருந்தது. அவை அவர்களை முஸ்லிம்கள் அல்ல என்று அறிவிக்காமல், அவர்களை முஸ்லிம்களாக அங்கீகரித்-திருந்தால், இந்த விவகாரம் மேலும் சிக்கலாகி, அதன் விளைவாக அது தீர்க்கப்படாமல் தொடர்ந்து இருந்திருக்கும்.”

அதைப் போன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அஹ்மதிய்யத்தின் கொள்கைகளை கடந்தகால அறிஞர்-களின் கருத்துகளை சான்றாக வைத்து ஆணித்தரமாக எடுததுரைத்தது முழு அவையின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒருமுறை கத்மே நுபுவ்வத் தொடர்பாக தேவ்பந்தின் பெரும் தலைவரும் தாருல் உலூம் மதரஸாவின் நிறுவனருமான மவ்லானா முஹம்மத் காசிம் நனோவ்டி (1832-1880) தனது தஹ்ஸிருன் நாஸ் எனும் நூலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலோ அல்லது அன்னாருக்குப் பிறகோ ஒரு நபி தோன்றினால் அது கத்மே நுபுவ்வத்திற்கு எதிரானது அல்ல என்று எழுதியிருப்பதை ஹுஸூர் அவர்கள் சான்றாகக் காட்டியதும் முழு அவையும் நிசப்தமானது.

## செப்டம்பர் 7, 1974 யவ்முல் .ஃபுர்கான்

சுமார் இரண்டு மாத காலம் நீடித்த இந்த விசாரணையின் நிறைவாக செப்டம்பர் 7 ஆம் தேதி முன்கூட்டியே திட்டமிட்டபடி சிறப்புக் குழுவின் பரிந்துரையை ஏற்று பாக்கிஸ்தான் தேசிய அவை அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர் என அறிவித்து தீர்மானம் இயற்றியது. இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு மகத்தான முன்னறிவிப்பு புதியதோர் கோணத்தில் நிறைவேறியது .

ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பனீ இஸ்ராயீல் 72 பிரிவுகளாகப் பிரிந்தார்கள். அதே போன்று எனது உம்மத்தும் 73 பிரிவுகளாகப் பிரியும். இவற்றுள் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் நரகத்திற்குரியவை. அப்போது சஹாபிகள் கேட்டார்கள்: “அல்லாஹ்வின் தூதர்அவர்களே! அந்த வெற்றி பெறும் பிரிவு எது? அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நானும் எனது சஹாபிகளும் எந்த வழியில் இருக்கிறோமோ, அந்த வழியில் இருப்பவர்கள்” என்று கூறினார்கள். (திர்மிதி ஹதீஸ் 2641)

1974 ஆம் ஆண்டு பாக்கிஸ்தான் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவம், இந்த முன்னறிவிப்பின் ஒரு வித்தியாசமான வெளிப்பாடாகத் திகழ்ந்தது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானமும் பின்னர் செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தமும் ஏற்படுத்திய தோற்றம் என்னவென்றால், முஸ்லிம் உம்மத்தின் 72 பிரிவுகள் ஒரு புறமும், ஒரே ஒரு பிரிவான ஜமாஅத் அஹ்மதிய்யா மறுபுறமும் இருப்பதாகும்.

இவ்வாறு 1974 ஆம் ஆண்டு எதிர்ப்பாளர்கள் ஜமாஅத் அஹ்மதிய்யாவைத் தனியாகப் பிரித்துக் காட்டியபோது, அவர்கள் தங்களுடைய செயலின் மூலமாகவே அனைத்து பிரிவுகளும் ஒரு புறமும், ஜமாஅத் அஹ்மதிய்யா தனித்த சிறுபான்மை பிரிவாக மறுபுறமும் இருப்பதை வெளிப்படுத்தி-னர். அந்த நேரத்தில் இது குறித்து செய்தித்தாள்களிலும் இதற்கு ஒத்த கருத்துகள் வெளியாகின. சுருக்கமாகச் சொல்வதானால், உம்மத்தின் 72 பிரிவுகளும் ஒன்று சேர்ந்து, “ஜமாஅத் அஹ்மதிய்யாவை இஸ்லாத்திலிருந்து வெளியேற்றி உள்ளது” என்று அறிவித்தனர். நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களின் முன்னறிவிப்பின் அடிப்படையில் பார்த்தால், எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கத்துடன் எடுத்த அந்த முடிவே அதன் விளைவின் அடிப்படையில் ஜமாஅத் அஹ்மதிய்யாவை அந்த தனித்த சிறுபான்மை பிரிவாக வெளிப்படுத்தியது. இது அந்த ஹதீஸின் உண்மைத்தன்மை வெளிப்பட்டதற்கான ஒரு மகத்தான அடையாளமாகும். நேர்வழியை தவறான வழிகளிலிருந்து பிரித்துக் காட்டிய அந்த நாள் செப்டம்பர் 7, 1974 யவ்முல் ஃபுர்கான் ஆகும்.

# இக்காலத்து அஹ்மதிகளின் நற்பேறு M.T.A

இக்காலத்து அஹ்மதிகள் நற்பேறு பெற்றவர்கள். இங்கு அல்லாஹ் புதிய வசதிகளையும் கண்டுபிடிப்புகளையும் வழங்கியுள்ளான். டி.வி., இன்டர்நெட், வெப்ஸைட்ஸ் போன்றவற்றில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வார்த்தைகள் உள்ளன. பல்வேறு பெரிய மொழிகளில் பார்க்கவும் கேட்கவும் முடிகிற வேளையில் காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களை -யும் படிக்கவும் கேட்கவும் முடிகிறது. குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகள் அடங்கியதாகவே அவை இருக்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகவே அவை உள்ளன. ஜமாஅத்தின் ஒருமைப்பாட்டிற்கு அவை ஒரு புதிய கோணத்தை வழங்கியுள்ளன.

எனவே, ஒவ்வொருவரும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் M.T.A-வுடன் தனக்கு ஒரு தொடர்பை இணைக்க வேண்டும். அதன் ஒருமைப்பாட்டின் ஒரு பகுதியாக ஆகுங்கள். ஒவ்வொரு வாரமும் குறைந்தபட்சம் குத்பா கேட்பதற்கு குறிப்பாக கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு வீடும் தமது வீட்டை ஆய்வு செய்ய வேண்டும். வீட்டின் ஒவ்வொருவரும் கேட்டார்களா? மனைவி கேட்டு, கணவன் கேட்க -வில்லை எனில் பயனில்லை. தந்தை கேட்டு, தாயும் பிள்ளைகளும் கேட்கவில்லை எனில் அப்போதும் பயனில்லை. இந்த ஏற்பாடு ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்காகவாகும். இதனை அல்லாஹ் ஏற்பாடு செய்து தந்துள்ளான். இதன் மூலம் ஒரே நேரத்தில் காலத்தின் கலீஃபாவின் குரல் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் சென்று சேர்ந்து விடுகிறது. அதில் பங்கு பெறுவது ஒவ்வோர் அஹ்மதிக்கும் அவசியம் ஆகும். அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். என்ன கூறப்படுகிறது என்றே தெரியவில்லை என்றால் பிறகு கட்டுப்படுதல் எவ்வாறு உருவாகும்? விஷயங்களைக் கேட்கும் போதுதான் கட்டுப்படுவதற்குத் தகுதியானவர் -கள் ஆவோம்.

எனவே கட்டுப்பட வேண்டிய விஷயங்களைத் தேடுங்கள். அது அல்லாதது வெற்று வாதமாகும். அது வெளிப்படையான பிரகடனம் ஆகும். இஜ்திமாவில் எழுந்து நின்று அல்லது பைஅத்தின் வேளையில் தாங்கள் என்னென்ன நல்ல தீர்மானங்கள் எடுப்பீர்களோ அதனைக் கடைபிடிப்பதை அவசியமானதாகக் கருதுவேன் என்று பிரகடனம் செய்கிறோம். பெண்களும் பிரகடனம் செய்கிறார்கள் அல்லது அஹ்மதிய்யா கிலாஃபத்தை வலுப்படுத்த நாங்கள் முயற்சி செய்து வருவோம் என்று கூறப்படுவது வெறும் பிரகடனம் ஆகி விடும்.

ஒவ்வொரு வீடும் இதன் பக்கம் கவனம் செலுத்துமாறு அல்லாஹ் செய்வானாக! மேலும் அல்லாஹ் நமது தர்பிய்யத்திற்காக என்னென்ன வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளானோ அதிலிருந்து முழுமையாக பயனடையுமாறு செய்வானாக! தர்பிய்யத்தில் மட்டுமல்ல. இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பரப்புவதிலும் இது பெரும் பங்கு வகிக்கிறது. ஏதாவது காரணத்தால் LIVE ஆக கேட்க முடியாதபோது ரிக்கார்டிங் கேட்கலாம். இன்டர்நெட்டிலும் உள்ளது. பல நிகழ்ச்சிகளும் குத்பாக்களும் பல சிறப்பான நிகழ்ச்சி -களும் உள்ளன. அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் குறிப்பான தொடர்பு ஏற்படுத்துகிற வேளையில் அன்னாருக்குப் பிறகு கிலாஃபத் அமைப்புடனும் உறுதியான தொடர்பு ஏற்படுமாறும் கட்டுப்படுதலின் முழுமையான முன்மாதிரி காட்டுபவர்களாகவும் ஆகும் வாய்ப்பு தருவானாக! அந்த தொடர்பும் கட்டுப்படுதலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸிற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கட்டுப்படுதலின் வழியாக கடந்து இறைவனுக்கு கட்டுப்படுபவராகவும் அவனது திருப்தியைப் பெறுபவராகவும் மாற்றுகிறது. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கு வாய்ப்பு தருவானாக!

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 09.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam